# நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

இலவச வெளியீடு

மலர் : 3 இதழ் : 4 மார்ச் 2024



# ஸ்ரீ விசாலம் சிட் :.பண்ட் லிமிடெட்

நம்பிக்கை, நாணயம், நேர்மை, நிலையான தன்மையுடன் மக்கள் சேவையில்

## "தலைமுறைகளை கடந்து வாழ்வின் சவால்களை எதிர்கொள்ள உங்களுடன்"

ஒன்றாக நாம் வளர்வோம்

**ரூ.1,00,000/-**

முதல்

**ரூ.1,00,00,000/-**

வரையிலான மதிப்புள்ள சீட்டுகளை சிறந்த முறையில் நடத்தி வருகிறோம்



77th ANNIVERSARY

எங்களின் வெற்றிப்பயணத்தில் மேலும் ஓர் மைல் கல் உங்களுடன்...

SREE VISALAM CHIT FUND LTD. SVCF ESTD 1947 REGD. TIRUNELVELI

**பதிவு அலுவலகம்:**
திருநெல்வேலி - 627006. போன்: 0462-2333474

**நிர்வாக அலுவலகம்:**
பள்ளத்தூர் - 630107. போன்: 04565 283477

**மத்திய அலுவலகம்:**
219, அண்ணா சாலை, சென்னை - 600002.
போன்: 044 28525344, 044 28523386

WWW.SREEVISALAM.COM +91 86670 03356

# விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

நகரத்தார் வாசிப்பின் ஓர் அங்கமாக மாதந்தோறும்
நாம் நகரத்தார் மின்னிதழ் உலகளவில் வெளிவருகிறது.
பெரும்பான்மை நகரத்தார்களை சமூக இணையதள
ஊடகங்களின் வழி எளிதில் சென்றடையும்
நமது மின்னிதழில் உங்கள் நிறுவனம் மற்றும் தாங்கள்
சார்ந்த விளம்பரங்கள் இடம்பெற்றால் உலகளாவிய
நகரத்தார்களை எளிதில் சென்றடையும் .

நமது இதழில் விளம்பரம் செய்ய

ஒரு பக்க விளம்பரத்திற்கான
கட்டணம் ரூபாய் 350/= மட்டுமே

ஓர் ஆண்டிற்கு ( 12 இதழ்கள் ) விளம்பரத்திற்கான
கட்டணம் – ரூபாய் 4000/= மட்டுமே

குறைந்த செலவில் தங்களது விளம்பரங்களை
நமது மின்னிதழில் வெளியிட்டுப் பயன் பெறுங்கள்.

**மேலும் விபரங்களுக்கு**

9791776534

naamnagarathar@outlook.com



# நாம் நகரத்தார்

**சமூக இணையதள மின்னிதழ்**


மலர் : 3 இதழ் : 4 மார்ச் 2024

இலவச வெளியீடு

**பதிப்பாசியர்**

இராம.சொக்கலிங்கம்
நற்சாந்துபட்டி

---

**இதழாசிரியர்**

உமையாள்

---

**ஆலோசகர்**

இளமுகில். நாராயணன்
தேவகோட்டை

---

**இதழ் வடிவமைப்பு**

ப. சுந்தரமகாலிங்கம்

---

**புத்தக ஆக்கம்**

சேனா டிஜிட்டல்
மின்நூல் வெளியீட்டாளர்கள்
172 – D மேட்டுப்பாளையம் சாலை
நீலகிரி பெர்டிலைசர் காம்பவுண்ட்,
கோயம்புத்தூர் – 641043.

---

**விளம்பரம் தொடர்புக்கு**

97917 76534

---

கட்டுரைகள் மற்றும் இதர படைப்புகளுக்கு படைப்பாளர்களே பொறுப்பு. விளம்பரங்கள் விளம்பரதாரரின் பொறுப்பில் வெளியாகின்றன.

# வளவுக்குள்...

அன்பு வாசகர்களுக்கு ,

வணக்கம் .

நகரத்தார்கள் வாசிப்பின் ஓர் அங்கமாக வலம் வரும் நம் மின்னிதழ் வாயிலாக வாசக உறவுகளாகிய உங்களைச் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி .

இன்னும் சில தினங்களில் தெய்வத் திருமணங்கள் நடைபெற்ற பங்குனி உத்திர நன்னாள் வரவிருக்கிறது .

இந்நாளில் இறைவனின் திருமணத்தைக் கண்டு வணங்குவது , திருமணம் நடைபெறாதவர்களுக்கு வெகுவிரைவில் திருமண கைகூடும் என்பது நம்பிக்கை. இந் நன்னாளில் நம் நகரத்தார் புள்ளிகள் பெருக எல்லாம் வல்ல இறை அருளை வேண்டுவோம் .

வழக்கம் போல் தங்கள் அனைவரது வாசிப்பை கவரும் வகையில் இந்த இதழை தேர்ந்தெடுக்கப்பட்ட பல ஆக்கங்களுடன் வெளியிடுகின்றோம்.

வாசகர்களாகிய உங்களில் பல சிறந்த படைப்பாளிகள் உள்ளனர் . உங்களின் படைப்பாற்றலை உலகுக்கு தெரிவிக்க ஒரு அரிய வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதில் நாம் நகரத்தார் மின்னிதழ் பெருமை கொள்கிறது.

உங்களை படைப்புக்களை எங்களுக்கு மின்னஞ்சல் வாயிலாக எழுதி அனுப்புங்கள் . தேர்ந்தெடுக்கப்படும் படைப்புகள் வரும் இதழ்களில் வெளியிடப்படும் .

நகரத்தார்களின் வாசிப்பை வளர்க்கும் விதத்தில் தொடரும் எங்களது முயற்சிக்கு தங்கள் அனைவரது ஆதரவும் அவசியம்.

இதழை தொடர்ந்து வாசிப்பதோடு மற்ற நகரத்தார்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள் . மேலும் நமது மின்னிதழின் வளர்ச்சியில் பங்களிக்கும் வகையில் மலரில் விளம்பரம் செய்ய விரும்புபவர்கள் மலரின் மின்னஞ்சலிலோ அல்லது வாட்ஸாப் எண்ணிலோ தொடர்பு கொள்ளவும் .

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறியால் நகரத்தார் குலம் நாளும் செழிக்கட்டும்..!



அன்புடன்

இராம.சொக்கலிங்கம்
பதிப்பாசிரியர்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

# PALLATHUR MOTORS LLP

SWITCH TO THE FUTURE







மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் +91 80157 73735

பள்ளத்தூர் மோட்டர்ஸ், எண் 151, வி.ஓ.சி வீதி, காரைக்குடி - 630 001

**நமது சிந்தனைக்கு**

- உடல் உழைப்பு நல்குவோரை உதாசீனப்படுத்தாதீர்கள்! – கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா ............. 9

**மொழி**

- வாங்க பேசலாம் – பேரா கு. அன்பு மெய்யப்பன் ................................ 18

**கவிச்சோலை**

- நிலா – உமையாள் அண்ணாமலை ............................................. 24
- காசின்றி அமையாது உலகு – கவிஞர். எம்.சோலை ......................... 37
- வாராரு வாராரு அழகன் முருகன் வாராரு– அரு. சிவகாமி இராமனாதன்... 48
- குடும்பம் – கவிச்சுடர் தஞ்சை பழ. வள்ளியப்பன் ................................. 86

**வாழ்வியல்**

- பெண் கதவு ஆண் பூட்டு – சேவு.முத்துக்குமார் ................................ 28

**உணவே மருந்து**

- உண்ணக்கூடிய தங்கம் சுரைக்காய் ................................................... 31

**பக்தித்தொடர்**

- கண்ணனின் உண்மை வடிவம் ................................................... 38

**பண்பாடு**

- நகரத்தார் திருமணம் – அண. சீனிவாசன் ........................................ 42

**சமையல்**

- பச்சைப்பயறு கிரேவி – உமாராணி சொக்கலிங்கம் ................................ 48

**ஆன்மிகம்**

- கொரட்டியார் வீட்டு பொதுப் படைப்பு– **V.A.** நாராயணன் ............................ 52

**சிறுவர் பக்கம்**

- மழலையர் மழைத்துளிகள் – கல்லல். மீ. மணிகண்டன் ..................... 63

**மனிதவளம்**

- எண்ணங்களின் சக்தி ........................................................................ 65

**நிதிமேலாண்மை**

- பணம் சம்பாதிக்கலாம், பங்கு சந்தையில்... – க. ஹர்ஷவர்த்தினி ஸ்ரீ .. 69

**ஜோதிடம்**

- நீங்கள் எப்படி .. மிதுன லக்கினம் – ஜோதிடர். எல்லி ............................. 81

# உடல்உழைப்பு நல்குவோரை உதாசீனப் படுத்தாதீர்கள்!

– கவிஞர் அரிமழம் ப.செல்லப்பா.

இன்றைக்கு பல்வேறு நலப்பணிகளும் அறப்பணிகளும் நாட்டிலே நடைபெறுகின்றது. இப்படிப்பட்ட பணிகளுக்கு மூலகாரணமாக விளங்குபவர்கள் நிதியைக் கொடையாக வழங்குவோர் மட்டுமே! என்ற ஒரு தவறான புரிதல் எல்லோரிடத்தும் உள்ளது.அதற்குக்காரணம் நிதி மட்டுமே நன்கொடை என்று அனைவருமே நினைக்கின்றோம்.



திருப்பணியோ அல்லது நலப்பணியோ நடைபெற வேண்டும் என்றால்,அதற்கு நிதி மட்டும் போதுமா? அந்தத்திட்டத்தை நிறைவேற்ற எதிர்பார்த்த நிதியுதவி வந்து சேர்ந்து விட்டது என்றால், அந்தத்திட்டம் தானாகவே நடைபெற்று விடுமா? ஒவ்வொருவரும் சற்று சிந்தித்துப்பாருங்கள்!

நலத்திட்டங்கள் நடைபெற நிதியும் ஒரு காரணி என்றாலும்,அதுமட்டுமே திட்டங்களை நிறைவேற்ற போதுமானது

அல்ல! நிதியோடு,நாலுபேர் அந்தத்திட்டத்தை செயல்படுத்த தன்னலம் பாராது முன்வர வேண்டும்.

நிதியைக்கொடையாக கொடுக்க இயலாதவர்கள் பலர் உள்ளனர். அவர்கள் நல்ல திட்டங்கள் பல நாட்டிலே செயல் வடிவம் பெற, தங்களின் உடல்உழைப்பை நல்குவதற்கு முன்வருவார்கள். அவர்களின் கொடையான உடல்உழைப்பை ஏற்றுக்கொள்வதில் தயக்கம் காட்ட வேண்டியது இல்லை.



வேலைக்கு சம்பளம் வாங்கிக்கொண்டு உழைப்பவர்கள் தொழிலாளிகள். தங்களின் விலைமதிக்க முடியாத நேரத்தையும்,அறிவாற்றலையும்,உடல் உழைப்பை யும் தர முன்வருவோர் தியாகத்தின் திருஉருவங்கள். அவர்களும் பெரும் கொடையாளர்கள் தானே!

இத்தகையோரை சிலர் எள்ளிநகையாடுவதும் உண்டு. இன்னும் சிலர் வெளிப்படையாகவே, எங்களுக்குத்தேவை நிதிதானே தவிர உடல்உழைப்பு ஒன்றும் தேவையில்லை என்று ஆணவத்தின் உச்சிக்குப் போய் உதாசீனப் படுத்துவார்கள்.

உடல் உழைப்பை நாங்கள் காசு கொடுத்து வாங்கிக் கொள்கிறோம்,நீங்கள் ஒன்றும் சிரமப்பட வேண்டாம் என்று கிண்டல் செய்வார்கள் சில அறிவில்லாத மூடர்கள்.

எத்தனையோ பெரிய திருக்கோவில்களில் திருப்பணிகள் நடைபெறுகின்ற பொழுது, திருப்பணிக்குழுவினர்கள் என்ற ஒரு அமைப்பை உருவாக்குகிறார்களே! அது ஏன் தெரியுமா? அந்தக் குழுவில் நிதிதந்தோர் மட்டுமே இடம் பெற்று இருந்தால் அதற்குப்பெயர், திருப்பணிக்குழுஅல்ல, நிதிஅளித்தோர்குழுஎன்று மாற்றித்தான் அழைக்க வேண்டும்.



திருப்பணிக்குழுவில் இடம் பெறுவோர் அனைவரும் பல்வேறு துறைகளில் அனுபவம் பெற்றவர்களாக இருப்பார்கள். பொறியாளர்கள், வங்கியாளர்கள், கணக்காளர்கள்,கட்டிடக் கலைஞர்கள்,சிற்பிகள், ஸ்பதிகள், வணிக நிறுவனங்களில் பொறுப்பில் இருப்பவர்கள், வணிகர்கள்,புகைப்படக் கலைஞர்கள், மக்கள் தொடர்பு மிக்கவர்கள், உள்ளூர்

பிரமுகர்கள், பேராசிரியர்கள், எழுத்தாளர்கள்,கவிஞர்கள் என பண்முகத்தன்மை கொண்டோர்கள் இடம் பெறுவார்கள். இவர்களின் அறிவாற்றலை தக்கவாறு பயன்படுத்திக்கொள்வதும்,அவர்களை முழுமையாக திருப்பணிகளில் ஈடுபாடு கொள்ளவைப்பதும் மிகச்சிறந்ததாகும்.

இதுபோன்ற ஆற்றல்களை எவராலும் விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. இப்படிப்பட்டோரை நிதிகொடுக்கவில்லையே என்று எவருமே ஏளனப்படுத்தி விடக்கூடாது. நிதியைவிட அவர்கள் தரும் உழைப்பு உன்னதமானது.

அனைவரையும் ஒன்றினைத்து செயல்படும் பொழுதுதான் எந்தத் திருப்பணியும் வெற்றி பெறும். மருத்துவமனையிலே உயிருக்குப்போராடும் ஒரு நோயாளிக்கு அவசரமாக குறிப்பிட்ட வகை ரத்தம் தேவைப்படுகிறது. அந்த நோயாளியோ செல்வச் செழிப்பு மிக்கவர். அவரிடம் உள்ள பணத்தைக்கொண்டு வெளிநாடு சென்று வைத்தியம் பார்க்கலாம். ஆனால் அவரது உடல்நிலை விமானப்பயணத்திற்கு ஏற்ற நிலையில் இல்லை. மருத்துவர்கள் தேவை என்று தெரிவித்த குறிப்பிட்ட வகை ரத்தம் கிடைப்பது அரிது. அவரிடத்திலே உள்ள பணத்தைக்கொடுத்து ரத்தத்தை வாங்க முடியவில்லை.காரணம் எந்த ரத்த வங்கியிலும் அந்த ரத்தம் இல்லை. பலரும் முயற்சி செய்கிறார்கள். இறுதியாக அந்தஊரில் தெருக்களைச் சுத்தம் செய்யும் துப்புரவுத்தொழிலாளி ஒருவரின் ரத்தம், நோயாளிக்குத் தேவைப்படும் ரத்தவகையைச்சார்ந்தது.



உடனே அவரிடம் போய் பேசிக்காசு கொடுத்து ரத்தம் கேட்கிறார்கள். அந்தக் காசை அவர் கையால் கூடத்தொடவில்லை. உடனே

உ

# திருச்சி ஸ்ரீ வளத்தி சிட்பண்ட்ஸ் (பி) லிட்.

VALATHI
Since 2005

## ஸ்ரீ முத்துமீனா சிட்பண்ட்ஸ் (பி)லிட்.

**இன்றைய சேமிப்பே, நாளைய வளர்ச்சியின் அடையாளம்.**

## எங்களிடம் நடைபெறும் சீட்டின் மதிப்பு

**ரூ.1,00,000/– முதல்**

**ரூ.25,00,000/– வரை**

அதிகபட்ச உச்சவரம்பு 25% முதல் 40% வரை

பதினேழு (17) ஆண்டு கால நம்பிக்கை! நாணயம்! நேர்மையான அணுகு முறை!

**பொதுமக்களிடமிருந்து எந்தவிதமான டெபாசிட்களும் பெறுவதில்லை.**

0431-2760064,80
3580292,7968005.

துவக்கம்
2005

94439 86143

## TRICHY SHREE VALATHI CHIT FUNDS (P) LTD.

## SRI MUTHUMEENA CHIT FUNDS (P) LTD.,

C-95, மூர்த்தி ஸ்கொயர், முதல் தளம்,
5வது கி ரா ஸ் தில்லைநகர் மெயின் ரோடு,
MPM ஸ்டோர்ஸ் மாடியில் திருச்சி - 620 018.
Cell : 94439 86143

9/1, (4/1) அருணோதயா அபார்ட்மெண்ட்,
G-1, தரைத்தளம், லோகையா தெரு,
சாலிகிராமம், சென்னை - 600 093.
Cell : 91235 71029,

50, தெற்கு மாரட் வீதி,
(ஸ்டேட்பேங்க் ஏ.டி.எம் மாடியில்)
மதுரை - 625 001. Cell : 93616 07776, 89034 90064

tvcfpl@gmail.com www.valathichitfunds.com

★ சத்தியமேவ ஜெயதே ★

குறிப்பிட்ட மருத்துவ மனையை நோக்கி நடந்து செல்கிறார். தனது உடலில் இருந்து ஒரு குடுவை ரத்தத்தை,அந்த நோயாளிக்கு கொடையாகக் கொடுத்து விட்டு, நன்றி என்ற வார்த்தையைக்கூட எதிர்பார்க்காமல் மீண்டும் நடந்தே தன் வீடுநோக்கிப் பயணமானார். இவர் கொடுத்த கொடை காசல்ல! யாருமே கொடுக்க முன்வராத,விலை மதிப்பற்ற தனது குருதியைக்கொடையாகக்கொடுத்தார். அதனால்அவர் குருதிக்கொடையாளர் ஆனார்.காசு இருந்து என்ன பயன்? காசு உயிரைக் காப்பாற்றுமா? இல்லை காசு குருதியாக மாறுமா? தன் உடலில் உள்ள குருதியை கொடையாகக் கொடுத்தாரே அவர்தான் உலகில் மிகப் பெரியகொடையாளர். இன்னும் சொல்லப் போனால்,அந்தத்துப்புரவு பணியாளரிடம் பணம்சற்று பையில் இருந்து இருந்தால்,குருதியோடு சேர்த்து அந்தப் பணத்தையும்,நோயாளிக்கு கொடையாக கொடுத்திருப்பார்.இது போலத்தான் நண்பர்களே உடல் உழைப்பையும் கொடையாகத்தர முன்வருபவர்கள் தங்களிடம் இருப்பதைக்கொடுத்து மகிழ்ச்சி அடைகிறார்கள் அவ்வளவுதான்!

அரசியல் கட்சிகள் அந்தக்காலத்தில் கூட்டமோ, மாநாடோ நடத்துவார்கள்.

அப்போதெல்லாம் அந்த அந்தக்கட்சியைச்சார்ந்த பணவசதியற்ற தொண்டர்கள் மிகுந்த ஆர்வத்தோடு,போட்டி போட்டுக்கொண்டு,உடல் உழைப்பால் தெருவெங்கும் கொடிகளும், தோரணங்களும் கட்டி மகிழ்வார்கள். பசியை மறந்து, தங்களின் கையிலுள்ள காசையும் உழைப்பையும் நல்கி



செய்தபணி அது. அதனால் தான் அன்றைக்கு அரசியல் கட்சிகளில் உள்ள தொண்டர்கள் துடிப்போடு செயல்பட்டார்கள். அன்றைக்கு அந்தக் கட்சிகளின் தலைவர்களாக இருந்தவர்கள், தொண்டர்களின் உடல் உழைப்பை உதாசீனப் படுத்தவில்லை. தொண்டனை தவிர்த்து விட்டு கூலிக்கு ஆள்பிடித்து கட்சிக்கொடியை கட்டவில்லை. அந்த அளவிற்கு அவர்களிடம் அன்றைக்கு பணம் இல்லை. எனவேதான் தொண்டனின் தொண்டை மதித்து ஏற்றுக் கொண்டார்கள். கொடிபிடிக்கும் தொண்டனே முடிவு எடுக்க வேண்டும்!என்று சொல்லி தொண்டர்களை உயிர்ப்போடு வைத்துக் கொண்டார்கள். அதன் விளைவாக வெற்றியும் பெற்றார்கள்.

ஆனால் இன்றைக்கு காட்சிகள் மாறிவிட்டன. நிதிவசதி மிக்கோர் கட்சிகளில் பொறுப்பில் இருப்பதால், பணம் கொடுத்து வீதிதோறும் கட்சிக்கொடிகளை கட்டுகிறார்கள். என்ன மாற்றம் என்றால் கொடிகளை தொண்டர்களுக்குப்பதில், சிறு நிறுவன ஊழியர்கள் கட்டுகிறார்கள். உற்சாகத்தோடு,உடல் உழைப்பை நல்கிய தொண்டர்கள் குறைந்து விட்டனர் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும். அதனால்தான் கட்சிகளின் வளர்ச்சியில் தேக்கம் ஏற்பட்டுப்போனது என்பதை அனுபவம் மிக்கவர்கள் உணர்ந்தார்கள்.

எனவே நண்பர்களே! ஒன்றை மட்டும் நினைவிலே கொள்ளுங்கள்.உடல் உழைப்பு நல்க முன்வருவோரை இருகரம் நீட்டி வரவேற்று மகிழுங்கள். இன்றைய உலகில் மனிதர்கள் தங்களால் முடிந்த நிதியை அளித்து விட்டு,அத்தோடு எங்களை விட்டுவிட்டால் போதும் சாமி என்று நினைக்கின்ற மனப்பான்மைக்கு வந்து விட்டார்கள்.

இப்படிப்பட்ட சூழலில், தங்களுடைய வேலைகளை எல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு,குடும்பத்தின் தேவைகளை தள்ளிப் போட்டுவிட்டு,பொதுப் பணிக்காக,உடல் உழைப்பைத்தர

முன்வருவோரை போற்றுங்கள்! அவர்களை போற்றினால் மட்டுமே எந்தப்பணியும் சிறப்போடு நடைபெறும் நம்புங்கள்!



இன்னுமொரு தலைப்போடு மீண்டும் உங்களைச் சந்திக்கிறேன்.கட்டுரை குறித்த உங்களின் எண்ணத்தை பதிவு செய்யுங்கள். நான் தொடர்ந்து எழுதிட, என்னைச் செம்மைப் படுத்தும் என நம்புகிறேன்! உதவுங்கள் தோழர்களே!



கட்டுரை ஆசிரியர்

தொடர்புக்கு: 9791033913,

aamchennai@gmail.com

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில் இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்

t.me/naamnagarathar

Join Telegram

"இன்றைய சேமிப்பு நாளைய முதலீடு"

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA



## PL RAMANATHAN (KANDANUR)

**INSURANCE ADVISOR**
LIC of india, Thiruvotriyur Branch
**Mobile : 99 40 132 132**

- ★ To take care of Childresn's Education
- ★ To Create Corpus for Child' marriage
- ★ To Create Corpus for Retirement Expenses
- ★ To save your Taxes at the time of Investment & Maturity

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

Off Thiruvottriyur Branch "Jeevan Pallava", No. 142, 143 & 144, T.H. Road, Tondiarpet, Chennai-81. Resi:: G-1, Plot No. 15, Door No. 10, Teachers Guild Colony, Villivakkam, Chennai-49.
Tel.: (O) 2345 1530 (M) 99401 32132
E-mail: ourlicplr@gmail.com, licplr@yahoo.com

LIC LIFE INSURANCE CORPORATION OF INDIA

# வாங்க பேசலாம் ..!

(செட்டிநாட்டு வட்டாரச் சொற்கள்)



-பேரா.கு.அன்புமெய்யப்பன்
இராமசாமி தமிழ்க் கல்லூரி
காரைக்குடி

பகுதி - 4

**நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தால் மட்டும் தனித்துவமாகப் பேசப்பட்ட, பேசப்படுகின்ற சொற்களைத் தற்காலத் தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதே இத்தொடரின் நோக்கம்...வாங்க பேசலாம்..!**

## காப்புக் கட்டுப் புதுமை

தாயாகவும், தந்தையாகவும் நம்மை உணரச் செய்கின்ற முதல் குழந்தைக்கு என்றுமே தாய் தந்தையரிடம் பாசம் அதிகமாக இருக்கும். அந்நிகழ்வு மிக மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுவது வழக்கம். அதிலும் ஆண் குழந்தை என்றால் அதற்கு அதிக மதிப்பு. அதனை ஒரு விழாவாகக் கொண்டாடியுள்ளனர் .நம் நகரத்தார்கள். அந்நிகழ்வுக்குக் காப்புக் கட்டுப் புதுமை எனப் பெயர்.



இது நம் இனத்தார் மட்டுமே பயன்படுத்திய சொல். இதற்கு மற்றொரு பெயரும் உண்டு. அரைக் கலியாணம். அதாவது. தன் வீட்டில் கலியாண வயதைத் தாண்டிய ஆண் மக்கள் இருக்கின்றனர் என்பதைத் தன் சுற்றத்தாருக்குத் தெரிவிப்பதற்காக நடத்தப்பட்டுள்ளது இந்நிகழ்வு. பத்து வயதைத் தாண்டிய ஆண்பிள்ளைகளுக்கு இந்நிகழ்வு நடத்தப்பட்டுள்ளது. அக்காலத்தில் மிக இளம் வயதில் திருமணம் செய்துவிடும் வழக்கம் இருந்துள்ளமையால், 10 வயதில் இவ்விழாவை ஏற்பாடு செய்துள்ளனர் என உணர முடிகிறது. கார்த்திகை நட்சத்திரம் முருகனுக்கு உரியது. முருகனைப் போற்றி கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தில் கார்த்திகைப் புதுமை என்னும் விழா செய்துள்ளனர் என்று ஒரு கருத்தும் சொல்லப்படுகிறது.



மகனை மணக்கோலத்தில் அலங்கரித்து, குதிரை மீதேற்றி, உறவினர்கள், பங்காளிகள் சூழ ஊர்வலமாகச் சிவன் கோயிலுக்கு அழைத்துச் சென்று வழிபட்டுத் திரும்பியுள்ளனர். மேலும், குதிரைக்கு முன்பாக நெருப்பு எரிகின்ற பந்தம் ஒன்றை பிடித்துச் செல்வதும் வழக்கம். அப்பந்தத்திற்குப் பெயர் சூள்பிடி என்பதாகும். அது மருவி சூப்பிடி என அழைக்கப்பட்டுள்ளது.(சுளுந்து, அல்லது சூள் என்பது ஒரு காட்டு மரம். அதில் தீவட்டி போன்ற விளக்கு ஒன்றை அமைத்து அதனைப் பிடித்துச் செல்வர். இதுவே சூள்பிடி, சூப்பிடி என வழங்கி வந்துள்ளது)

# ஸ்ரீ நித்யகல்யாணி சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்

Sign of Commitment

SRI NITHYAKALYANI CHIT FUNDS (P) LTD.

NKF

Our culture is financial Discipline

Money is Easier when your
Proactive Plan with Nithyakalyani







**Sri Nithyakalyani Chit Funds(P) Ltd.,**
#22, Lakshmi Road, TVS Nagar,
Madurai - 625 003.
Ph.No: 0452 - 2692680, Mob.No: 9786300304,
E-mail : sncfco@gmail.com

## Branches

| | | | |
|---|---|---|---|
| Madurai Main 98430 93250 | Trichy 98432 91654 | Arasaradi/mdu 73391 25777 | Thirunagar/mdu 84899 10191 |
| Dindigal 98432 91652 | Coimbatore 82200 52338 | Erode 75581 99888 | Srivilliputhur 70944 61192 |
| Anna Nagar/mdu 98432 91653 | Reserveline/mdu 98430 93256 | Aruppukkottai 73589 91777 | Dindigul (Regl.) 75581 99777 |

## திருவாதிரைப் புதுமை

தன் வீட்டில் திருமண வயதில் பெண் பிள்ளை இருக்கிறாள் என்பதை உறவினர்களுக்கு அறிவிக்கச் செய்யப்பட்ட நிகழ்வு திருவாதிரைப் புதுமை. ஆதிரை என்பது மணிமேகலையில் வருகின்ற ஒரு பெண்ணின் பெயர். இவள் நகரத்தார் மரபினள் எனக் கூறப்படுகிறாள். இவள் போல நம் குலத்துப் பெண்களும் விளங்க வேண்டும் என்ற கருத்தில் அவள் பெயரில் இவ்விழா நடத்தப்பட்டுள்ளது.

ஆதிரையின் வாழ்வு பற்றிய ஓர் சிறிய அறிமுகம். ஆதிரை புகார் நகரத்தைச் சார்ந்த வணிகர் குலப் பெண். அவளுக்கு சாதுவன் என்ற வணிகனை அவள் பெற்றோர் மணம் முடித்து வைக்கின்றனர். இருவரும் மனமொத்த வாழ்வு வாழ்ந்து வருகின்றனர். அவர்கள் வாழ்விலும் புயல் அடிக்கத் தொடங்குகிறது. சாதுவன் தீயவர்களுடன் சேர்ந்து சூது, மாது போன்றவற்றில் ஈடுபட்டுச் சீரழிகிறான். கைப் பொருள் இழந்தவனை கணிகையர் பெண்கள் புறக்கணிக்கின்றனர். மீண்டும் மனைவியை அடைகிறான்.

அவனை அரவணைத்து ஏற்கிறாள் ஆதிரை. பல வணிகர்கள் கடல் கடந்து, பொருள் ஈட்டச் செல்கின்றனர். அவர்களோடு செல்ல சாதுவன் இசைகிறான். அவனது பிரிவுத் துயரைத் தாங்கிக் கொண்டு அவனை வழியனுப்பி வைக்கிறாள் ஆதிரை. கப்பல் நடுக்கடலில் சென்ற போது, நடுச் சாமத்தில் ஏற்பட்ட புயற்காற்றில் அலைக்கழிக்கப்பட்டு உடைகிறது. பலர் கப்பலில் இருந்து உடைந்த மரத் துண்டுகளைப் பற்றிக் கொண்டு தப்பிக்கின்றனர். சாதுவன் கையில் அகப்பட்டது கொடிமரத்தின் ஒரு துண்டு. அது அவனை அருகில் இருக்கும் மலைத் தீவில் கொண்டு சேர்க்கிறது.

கப்பலில் தப்பிய சிலர் ஊர் வந்து சேர்கின்றனர். அவர்கள் ஆதிரையிடம் உன் கணவன் இறந்து விட்டான் எனத்

தெரிவிக்கின்றனர். மனம் நொந்த ஆதிரை, அது பொறுக்கமாட்டாமல், கைம்மை நோன்பிருக்கிறாள். ஆயினும் அவள் மனம் கணவன் மறைவால் பெருந்துயர் எய்துகிறது. ஆகவே, புகார் நகரத்துப் பெரியவர்களிடம் செல்கிறாள். தனக்கு ஓர் சிதை மூட்டி, அதில் நான் தீப்பாய வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறாள். அவளது நிலையைக் கருத்திக் கொண்ட ஊரார் அதற்கு ஒப்புக் கொள்கின்றனர். தீ மூட்டப்படுகிறது. புத்தாடை உடுத்தி, கழுத்தில் மாலையும், உடல் முழுதும் சந்தனமும் பூசிய நிலையில் தீப்பாய்கிறாள் ஆதிரை. மாலை தீ பட்டு வாடவில்லை. புத்தாடையைத் தீ தீண்டவில்லை. சந்தனம் காயவில்லை. தீ அவளைத் தீண்டவே இல்லை. அப்பொழுது ஒரு அசரீரி கேட்கிறது. உன் கணவன் இறக்கவில்லை. அவன் உயிருடன் ஒரு தீவில் இருக்கிறான். விரைவில் வணிகர்களோடு வந்து சேர்வான் என்கிறது. இதைக் கேட்ட ஆதிரை, நீரில் மூழ்கி வருபவள் போல் தீயில் மூழ்கி வெளி வந்து வீடு சேர்கிறாள். சாதுவனும் பல இன்னல்களைச் சந்தித்து பின் ஊர் வந்து சேர்கிறான். இருவரும் மன மகிழ்ச்சியுடன் வாழ்கின்றனர். இவ்வாதிரையிடம்தான், மணிமேகலை முதல் பிச்சை வாங்குகிறாள். அவ்வாதிரை போன்று நம் பெண்களும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்பதற்காக அவள் பெயரில் இவ்விழாக் கொண்டாடப்பட்டுள்ளது.



அந்நிகழ்வன்று, உரிய பெண்ணுக்கு மணக் கோலம் செய்விப்பர். ஆடை அணிகலண்கள் அணிவித்து, அவளை ஒத்த இளம் பெண்களுடன் அருகில் உள்ள வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுவாள்.

ஆடி ஆடி வாரோம் அவரைக்காய் போடுங்க

பாடிப் பாடி வாரோம் பாடவரங்காய் போடுங்க

கூடிக் கூடி வாரோம் கொத்தவரங்காய் போடுங்க

என்று பாடித் தன் கைகளில் கொண்டு சென்ற பாத்திரங்களில் உணவுப் பொருட்களைப் பெற்றுத் திருப்புவராம். எங்கள் வீட்டில் திருமண வயதுடைய பெண் இருக்கிறாள் என்பதைத் தெரிவிப்பதற்காகவே இவ்விழா எடுக்கப்பட்டுள்ளது. சென்று நூற்றாண்டு வரை இவ்விழாக்கள் கொண்டாடப்பட்டு வந்துள்ளன.

### உபதேசப் புதுமை

பஞ்சாட்சர உபதேசம் பெற்றுக் கொள்வது என்னும் வழக்கம் தொன்றுதொட்டு நம்மவர்களிடம் இருந்து வரும் சிறந்த பழக்கமாகும். இதனைத்தான் உபதேசம் என்று சொல்கின்றனர். இதுவே, முற்காலத்தில் உபதேசப் புதுமை என்ற பெயரில் விழாவாகக் கொண்டாடப்பட்டுள்ளது. 5 நாள்களுக்கு இவ்விழா கொண்டாடப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. ஆனால் இன்று இவ்விழாக்கள் அரிதாகி, வழக்கொழிந்து விட்டன.



– தொடர்ந்து பேசுவோம்



# நிலா ..!!

தினம் தினம் பார்ந்தாலும் திகட்டாது உன் முகம்
உனை தினம் தினம் பார்க்க தூண்டும் என் அகம் !

எங்கிருந்து பார்த்தாலும் நீ மட்டும் என் அருகில் இருக்கிறாய்
சற்று துயில் எழுந்து பார்த்தால் ஏன் தொலைந்து போகிறாய்?

மாதத்தில் ஒருநாள் மட்டும் உன் முழுமுகத்தை காண்பிக்கிறாய்
மற்ற தினங்களில் ஏன் முழுமுகத்தை காட்ட வெட்கப்படுகிறாய் !

எங்கள் கண் உன்மேல் பட்டதால் தானோ
கருப்பழகி நிலவு வெந்நிலவை சுத்திப்போட்டு

சுற்றிக்கொண்டே உள்ளதோ ?
சுற்றட்டும் பரவாயில்லை !நாங்களும்

உன்னை உற்றுக்கொண்டே உள்ளோம்



உமையாள் அண்ணாமலை
வெ .தெ .வீடு
தேவகோட்டை

# கண்டனூரில் மாதாந்திர திருவாசக முற்றோதல்



கண்டனூர் நகரச் சிவன்கோயிலில் கண்டனூர் நகரத்தார் சிவநெறிக்கழகம் , கண்டனூர் ஞான வாசக பாராயண அன்பர் கூட்டம் சார்பில் 'திருவாசக முற்றோதல்' கடந்த மாசி மகத்தன்று (24.02.2024 –சனிக்கிழமை) திருச்சி தாயுமானவர் அவர்களால் துவக்கி வைக்க பெற்றது .



தொடர்ந்து ஒவ்வொரு ஆங்கில மாதம் நான்காம் சனிக்கிழமை காலை 9.30 முதல் மாலை 3.30 வரை கண்டனூர் நகரச் சிவன்கோயிலில் நடைபெற உள்ளது . பக்தர்கள் அனைவரும் கலந்து திருவாசக தேனைப் பருகி சிவனருள் பெற வேண்டுகிறோம் .
இந்த மாதம் நிகழ்வானது 23.03.2024 – சனிக்கிழமை நடைபெற உள்ளது .

# மலேசியா – மலாக்கா
# அருள்மிகு சன்னாசி மலை ஆண்டவர் மாசிமக உற்சவ நிகழ்வு புகைப்படங்கள்









புகைப்படங்கள் உதவி :
திரு. **KR.P.** இராமன் செட்டியார்.
கோலாலம்பூர்.மலேசியா

அட்டைப்படத்தில்
மலேசியா – மலாக்கா அருள்மிகு சன்னாசி மலை ஆண்டவர் – உற்சவர் மாசி மக அலங்காரம்.

பெண் கதவு, ஆண் பூட்டு - 4

# கடவுளும் மனைவியும்

சேவு.முத்துக்குமார்,
காரைக்குடி
94432 88931

பெண்ணின் அன்புக்கு மயங்கித் தன் கோபத்தைத் தொலைத்த ஆண்களே உலகில் அதிகம்.

கணவன் என்பவன் குடும்பத்தின் தலை போன்றவன், மனைவி கழுத்து போன்றவள் கழுத்தானது தலையை எத்திசையும் திருப்பும் சக்தி வாய்ந்தது. மனைவியும் கணவனை இயக்கும் வித்தையைக் கற்றுக் கொள்ள வேண்டும். திசைமாறித் திருப்பினால் விளைவுகள், எதிர்வினையாற்றும் தலை முதன்மையாகத் தெரிந்தாலும், அதை இயக்கும் கழுத்தே சிறப்புடையது. இல்லறத்தில் கணவனை விட மனைவியே சிறப்புக்கு உரியவள்.

கணவனிடம் கோபித்துக்கொண்டு நான் எங்க அம்மா வீட்டுக்குப் போறேன் என்று பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பும் மனைவிகள் எல்லாம் புத்திசாலிகள் அல்லர் அம்மாவைத் தன் வீட்டுக்கு வரவழைக்கும் மனைவிகளே புத்திசாலிகள்.

மனைவி கணவனிடம் எதிர்பார்ப்பது இரண்டு மட்டும் தான், அதைச் சரிவரச் செய்தாலே வாழ்க்கை வளமாகும்.

1. அவர்கள் பேசும்போது கேட்டுக்கொண்டே இருக்கணும்.
2. ஷாப்பிங் செய்யும்போது பார்த்துக் கொண்டே இருக்கணும்.

இதைப் பின்பற்றினாலே போதும், இவ்வாழ்வில் வெற்றிதான்.



தன் மனைவி தான் சொல்வதை மட்டுமே கேட்க வேண்டும் என்பது கணவனின் எதிர்பார்ப்பு.எதிர்பார்ப்பு நிறைவேறக் கடவுளை நோக்கித் தவம் இருந்தான் ஒரு கணவன், கடவுளும் வந்தார்.

பக்தா உன் தவத்தைக் கண்டு மெச்சினேன், என்ன வரம்வேண்டும் கேள்! சுவாமி இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்கு சாலை போடணும்.

சாலையா... இடையில் கடல் இருக்கு, சாலையெல்லாம் போட முடியாது. வேறு கேள் என்றார் கடவுள். என் மனைவி என்னை எதிர்த்து எதுவும் பேசக்கூடாது . நான் சொல்றத மட்டுமே

கேட்கணும் கோரிக்கையை வைத்தான் பக்தன்.

அதெல்லாம் நடக்காது, சரி அமெரிக்காவுக்கு சாலை அகலமாப் போடணுமா, குறுகலாப் போடணுமா.

படைத்த கடவுளாலே முடியாது என்று கற்பனையாகச் சொல்லப்பட்ட கதையாக இருந்தாலும், ஆண்கள் அனுபவத்தால் உணர்ந்து, வீண்முயற்சிகளில் இறங்காமல் சற்று அடங்கிப் போவதே உத்தமம். இதில் மெத்தனம் இருந்தால் வாழ்க்கை போர்க்களம் ஆகும்.கடவுளும் மனைவியும் ஒன்று. இருவரும் நாம் சொல்வதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்வார்கள். ஆனால் செய்வதை மட்டும் அவர்கள் விருப்பத்திற்கே செய்வார்கள். அவர்கள் விருப்பமே தனது விருப்பமாகக் கொண்டு, கணவன் இயங்கினால் வாழ்க்கை பூக்கள் மலரும் நந்தவனமாகும்.






கட்டுரை ஆசிரியர் சேவு. முத்துக்குமார் அவர்கள் காரைக்குடியில் வசிக்கும் இரணிக்கோவிலைச் சேர்ந்த நகரத்தார். காரைக்குடி எஸ்.எம்.எஸ்.வி மேல்நிலைப்பள்ளியில் முதுகலைத் தமிழாசிரியராய்ப் பணியாற்றுபவர். கவிஞராக, பேச்சாளராக, எழுத்தாளராக, நாடக ஆசிரியராக, சதுரங்க ஒருங்கிணைப்பாளர் என பன்முகத் திறமை கொண்டவர். தினமலர் நாளிதழ் வழங்கிய 'இலட்சிய ஆசிரியர்' விருதினைப் பெற்றவர். செல்: 94432 88931

# உண்ணக்கூடிய தங்கம் சுரைக்காய்

நாம் அன்றாடம் உண்ணும் காய்கறிகளில் அளப்பறிய சத்துக்கள் நிறைந்துள்ளன. ஆதிமனிதன் பயிர் செய்த காய்கறிகளுள் ஒன்று சுரைக்காய் . **Calabash / Bottle gour** என்றழைக்கப்படும் சுரைக்காய் உணவாகப் பயன்படும் ஒரு வெப்ப மண்டல தாவரமாகும். இதன் அறிவியல் பெயர் **Lagenaria siceraria.** சுரைக்காயின் இலை, கொடி, காய், விதை அனைத்தும் மருத்துவப் பயன் கொண்டவை.



கிராமப்புறங்களில் வீட்டு தோட்டங்களில் விளைவிக்கப்படும் சுரைக்காய் உடலுக்கு சத்து தருவதோடு மருத்துவகுணம் நிறைந்துள்ளது. இந்தியச் சமையலில் பொதுவாக இடம் பெறும்

சுரைக்காயின் தாயகம், ஆப்பிரிக்கா என்று கூறப்படுகிறது. இது இப்போது எல்லா நாடுகளிலும் பயிர் செய்யப்படுகிறது.



வெயில் காலத்தில் பெரும்பாலும் அதிக தண்ணீர் நிறைந்த காய்கறிகள் மற்றும் பழங்கள் இது போன்ற உணவுகளை தான் அதிகம் சாப்பிடுகின்றனர். அத்தகைய உணவுகளில் அதிகம் சேர்த்து கொள்ள கூடிய ஒன்று தான் சுரைக்காய். இந்த சுரைக்காயில் நீர் சத்துக்கள் அதிகம் இருப்பதால் இது உடலுக்கு அதிக நன்மை தரக்கூடியதாக இருக்கிறது. ஆகையால் சுரைக்காயை மக்கள் விரும்பி சாப்பிடுகின்றனர்.

இந்த சுரைக்காயில் நன்மைகள் இருப்பது போல சில தீமைகளும் இருக்கிறது. இந்தக் கட்டுரையில் சுரைக்காய் நன்மைகள் மற்றும் தீமைகள் என்ன என்பது பற்றி தெரிந்துக்கொள்ளலாம் வாங்க..!

**சுரைக்காயில் என்னென்ன சத்துக்கள் உள்ளது தெரியுமா?**

‘ 100 கிராம் சுரைக்காயில் 15 கலோரிகள் மட்டுமே உள்ளன.

‘ சுரைக்காயில் 96% நீர்ச்சத்து உள்ளது.

‘ இதில் நார்ச்சத்து, வைட்டமின் C, ரிபோஃப்ளேவின், துத்தநாகம், தயமின், இரும்பு சத்து, மெக்னீசியம் மற்றும் மாங்கனீசு போன்ற சத்துக்கள் நிறைந்துள்ளன. இதில் குறைந்த அளவு கொழுப்பு மட்டுமே உள்ளது.

## சுரைக்காயின் அசரவைக்கும் ஆரோக்கிய நன்மைகள்

- 'சுரைக்காயில் கரையக்கூடிய மற்றும் கரையாத உணவு நார்ச்சத்து அதிகமாக இருப்பதால், இது பைல்ஸ், வாயு மற்றும் மலச்சிக்கலுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது எளிதில் ஜீரணமாகும்.
- 'சுரைக்காய் எடை இழப்புக்கு உதவும். காலையில் வெறும் வயிற்றில் சுரைக்காய் ஜூஸ் குடிக்கும்போது, உடலுக்கு தேவையான வைட்டமின்கள், தாதுக்கள் மற்றும் உணவு நார்ச்சத்துக்களை பெறலாம் மற்றும் அதிகப்படியான பசியை கட்டுப்படுத்தலாம்.



- 'இதில் கொழுப்பு மற்றும் கொலஸ்ட்ரால் மிகவும் குறைவாக உள்ளது.
- 'சுரைக்காயில் கிட்டத்தட்ட 96% நீர்ச்சத்து இருப்பதால், உங்கள் தாகத்தை தீர்க்க இது ஒரு சிறந்த வழியாகும். கூடுதலாக, இது உடல் சோர்வடைவதையும் தடுக்கிறது. உடலை குளிர்ச்சியாகவும் புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கவும், சோர்வைத் தடுக்கவும் சுரைக்காயை உணவில் சேர்த்துக்கொள்ளுங்கள்.

- சுரைக்காயில் காணப்படும் பொட்டாசியம் போன்ற முக்கிய தாதுக்கள் இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்துகின்றன மற்றும் இதய பிரச்சினைகளின் அபாயத்தை குறைக்கின்றன.

- சுரைக்காய், உயர் இரத்த அழுத்தம் உள்ளவர்களுக்கு ஏற்ற ஒரு சிறந்த காய்கறியாகும்

- குறைந்த கலோரி உடைய சுரைக்காய் சர்க்கரை நோயாளிகள், செரிமான பிரச்சினைகள் உள்ளவர்கள் மற்றும் உடல்நிலை சரியில்லாத அல்லது காயமடைந்தவர்களுக்கு ஏற்ற ஒரு ஆரோக்கியமான காய்கறியாகும்.

- கல்லீரல் வீக்கமடைந்து, உணவை சரியாக ஜீரணிக்கவும் ஒருங்கிணைக்கவும் முடியாவிட்டால், கல்லீரல் செயல்பாட்டை சமநிலைப்படுத்த ஆயுர்வேத மருத்துவர்களால் சுரைக்காய் பரிந்துரைக்கப்படுகிறது.

- சுரைக்காயில் உள்ள இயற்கையான சர்க்கரை உடற்பயிற்சியின் போது இழந்த ஆற்றலை மீட்டெடுக்க உதவுகிறது. சுரைக்காய் ஜூஸை உடற்பயிற்சிக்கு பின் எடுத்துக்கொள்வது தசைகளின் செயல்திறனை அதிகரிக்கிறது.

- சுரைக்காய் எலும்புகளை வலுப்படுத்துவதற்கும் ஆஸ்டியோபோரோசிஸின் அபாயத்தைக் குறைப்பதற்கும் சிறந்தது.

- ஆஸ்டியோபோரோசிஸ் ஏற்படும் போது, நமது எலும்புகள் அதிகப்படியான உடையக்கூடியதாகவும் பலவீனமாகவும் மாறும். சுரைக்காயில் மெக்னீசியம், பாஸ்பரஸ், துத்தநாகம், தாமிரம், மாங்கனீசு மற்றும் பிற கனிமங்கள் இருப்பதால், அவை எலும்புகளை வலுப்படுத்தும் நன்மையைக் கொண்டுள்ளன.

- சுரைக்காய் கர்ப்பிணிகளுக்கு ஏற்றது. இது வைட்டமின்கள், தாதுக்கள், ஆன்டி ஆக்ஸிடன்ட்கள், ஃபோலிக் அமிலம், உணவு நார்ச்சத்துக்கள் உள்ளிட்ட பல்வேறு ஊட்டச்சத்துக்களை

கொண்டுள்ளது. ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் தாய் மற்றும் கருவை ஃப்ரீ ரேடிக்கல்களால் ஏற்படும் ஆக்ஸிஜனேற்ற சேதத்திலிருந்து பாதுகாக்கின்றன.

**சுரைக்காய் தீமைகள் :**



சுரைக்காயில் நன்மைகள் இருக்கும் அளவிற்கு சில தீமைகளும் இருக்கிறது.

- வாதம் மற்றும் காய்ச்சல் உள்ளவர்கள் சுரைக்காயை அதிக அளவு சாப்பிட்டால் உடலுக்கு தீமை விளைவிக்க கூடியதாகும்.
- அதேபோல தொப்பை உள்ளவர்கள் சுரைக்காயை எப்போதாவது ஒரு முறை மட்டும் சாப்பிட்டால் எடுத்துக்கொள்ள வேண்டும்.
- பெண்கள் மாதவிடாய் நேரத்தில் சுரைக்காய் சாப்பிடுவதை தவிர்ப்பது அவர்களின் ஆரோக்கியத்திற்கு நல்லது.
- சுரைக்காயை அளவுக்கு அதிகமாக சாப்பிடும் போது ஒற்றை தலைவலி, கண் பார்வை குறைவு மற்றும் உடல் எடை அதிகரிப்பு போன்ற பிரச்சனைகள் வரும் வாய்ப்பு இருக்கிறது.

**சுரைக்காய் சாப்பிட வேண்டியவர்கள்:**

- உடல் சூடு உள்ளவர்கள்
- பித்தம் அதிகமாக உள்ளவர்கள்
- சர்க்கரை நோய் உள்ளவர்கள்
- கை, கால் எரிச்சல் உள்ளவர்கள்

- **சுரைக்காய் சாப்பிடக்கூடாதவர்கள்:**

- வாதம் உள்ளவர்கள்
- இரத்த சர்க்கரை அளவு குறைவாக உள்ளவர்கள்
- அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள்
- அலர்ஜி உள்ளவர்கள்

உங்களை வியப்பில் ஆழ்த்தும் அளவிற்கு சத்துக்களையும், ஆரோக்கிய நன்மைகளையும் கொண்டுள்ள சுரைக்காயைப் பற்றி இந்தக்கட்டுரையில் தெரிந்து கொண்டோம் .சுரைக்காயை இனி ஒதுக்காமல் சாப்பிட தொடங்குவீர்கள். இந்த எளிய காயில் இத்தனை ஊட்டச்சத்துக்களா, என்று நீங்களே ஆச்சரியப்படுவீர்கள்.

(பொறுப்பு துறப்பு: அன்புள்ள வாசகரே, இந்தக் கட்டுரை உங்களுக்கு பல தகவல்களை வழங்குவதற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது. இதை எழுதுவதில் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களின் உதவியை நாங்கள் பெற்றுள்ளோம். இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். நாம் நகரத்தார் மின்னிதழ் இந்த தகவல்களை உறுதிப்படுத்தவில்லை.)

# காசின்றி அமையாது உலகு


காசும் காசும் காந்தமும் இரும்பும்
இவர்களுக்குள்ளே காதல் அரும்பும்
வசதியைப் பார்த்தே காசும் மயங்கும்
ஏழைகள் வீட்டில் தங்கத் தயங்கும்

வறுமையில் நேர்மை பெயர் தான் கிடைக்கும்
நேர்மைக்குப் பரிசாய் கடன் தான் கிடைக்கும்
காசை உணவாய் உண்ண முடியாது
காசில்லாமல் உணவு இங்கேது ?

காசு இல்லா ஞானியும் முழிப்பான்
காசு இருக்கும் மூடனே முடிப்பான்
காசு இருந்தா சுற்றமும் நம்மோடு
காசு இருப்போர் தாகத்திற்கே நீரோடு

கடன் வாங்கா செலவே நிறை
கஞ்சனின் கைகள் பணத்தின் சிறை
வசதிகளின்றி வாழாமல் பலபேர்
வசதிகளிருந்தும் கஞ்சனாய் சிலபேர்

காசின் அருமை குழந்தைக்கும் தெரியும்
இலவச பொம்மை எங்கே கிடைக்கும் ?
குழந்தையின் சேமிப்பு உண்டியலில் தொடங்கும்
அவசரத் தேவைக்கு உண்டியலே இணங்கும்.



கவிஞர் எம்.சோலை
காரைக்குடி .

ஏட்டில் இல்லாத மகாபாரதக் கதைகள் – 23

# கண்ணனின் உண்மை வடிவம்

– புலவர் த.கோவேந்தன், டி.லிட்



மாபாரதப் போர் வாராமல் தடுக்க வழி என்ன என்று சகாதேவனைக் கேட்டான் கண்ணன். நீ பாரத அமரில் யாவரையும் நீறுஆக்கிப் பூ பாரம் தீர்க்கப் புகுந்தாய்! புயல்வண்ணா! கோபாலா! போர்ஏறே! கோவிந்தா! நீஅன்றிப் மா பாரம் தீர்க்க மற்றார்கொல் வல்லாரே என்று கூறத் தொடங்கிய சகாதேவன், கண்ணா! நேராகக் கையால் பிடித்து நின்னை நான் கட்டுவனேல், வாராமல் காக்கலாம் மாபாரதம் என்று முடித்தான். சகாதேவா! என்ன கூறுவாய்! நீ எதைச் செய்ய முடிந்தாலும், எல்லாம் வல்ல இறைவனாகிய என்னைக் கட்ட இயலுமா? என்றான் கண்ணன்.

உன்னை நீ தானும் உணராதவனான கண்ணா! உன் உண்மை உருவத்தைக் காட்டு நான் கட்டுகின்றேனா? இல்லையா? பார்! என்றான். உடனே கண்ணன், தான் ஒருவனே பதினாறு ஆயிரம் வடிவு

கொண்டு சகாதேவன் எதிரில் நின்றான். இத்தனை வடிவங்களில் என் மூல வடிவம் கண்டு கட்டு பார்ப்போம் என்றான் கண்ணன். பெருஞானியாகிய சகாதேவன், தன் பக்தித் திறத்தில் மூல வடிவை அடையாளம் கண்டு அதனைத் தன்மனத்தினால் இறுக்கமாகப் பற்றிக் கொண்டான்.

சகாதேவன் மனத்தின் இறுக்கம் பொறுக்க இயலாமல் கண்ணன் சகாதேவா! நீ வென்றுவிட்டாய்! நீ மனத்தால் கட்டிய இறுக்கம் தாங்க இயலவில்லை! என்னை விட்டு விடு! என்று கெஞ்சினான் எம்பெருமான். இச்செய்தி மாபாரதத்தில்



வில்லிபுத்துசாழ்வார் கூறியது. கண்ணனைக் கட்டியதுபோல், இராமனையும் கட்டி ரசிக்க வேண்டும் என்று பரியாழ்வார் விரும்பினார். கண்ணன் சகாதேவன் மனத்தால் கட்டுண்டான். இராமனைப் பெரியாழ்வார் மல்லிகை மா மாலை கொண்டு, கட்டுவித்தார். திருமணம் ஆன புதிது. சீதையும் இராமனும் நூல் நடுவே நுழையினும் பொறுத்துக் கொள்ள இயலாத அன்றில்கள் போல் இணை பிரியாமல் நெருங்கி காதல் களியில் ஈடுபட்டனர்.

வேடிக்கைப் பேச்சுக்களும் வினோதக் கதைகளும் பரிமாறிக் கொண்டிருந்தனர். என்னிடம் இவ்வளவு நெருங்கிப் பழகுகின்றாயே! ஏதாவது காரணத்தால் நான் பிரிந்து செல்ல நேர்ந்தால் என்ன செய்வாய்! என்று கேட்டான் இராமன்.

என்ன செய்வேனா? பிரியவே முடியாதபடி கட்டிப் போட்டு விடுவேன்! என்றாள் சீதை! என்னைக் கட்ட உன்னால் முடியுமா? இராமன் இதோ கட்டிக்காட்டுகின்றேன் என்று கூறிக் கொண்டே சீதை, தன் கூந்தலில் சுற்றியிருந்த மல்லிகை மாலையை அவிழ்த்து, அதைக் கொண்டு அருகிலிருந்த சண்பகக் கொடியில் கட்டி விட்டாள்.



மல்லிகைக் கொடி தானே! இராமன் எளிதில் அறுத்துவிட மாட்டானா என்று நமக்குத் தான்றும். அது வெற்று மல்லிகைக் கொடியா?

கண்ணனைக் கட்டிய சகாதேவன் மனத்தன்பைவிடப் பலமடங்கு அன்பு அம்மல்லிகை மாலையில் பிணைந்துள்ளதே! மல்லிகை மாலையை அறுக்கலாம். அதில் பிணைந்துள்ள காதலன்பை இராமனால் அறுக்க இயலுமா? அல்லியம்பூ மலர்க்கோதய்! அடிபணிந்தேன் விண்ணப்பம்! சொல்லுகேன் கேட்டருளாய்! துணைமலர்க்கண் மடமானே! எல்லியம்போது இனிதிருத்தல் இருந்ததோர் இடவகையில் மல்லிகைமா மாலை கொண்டு அங்கு ஆர்த்ததுமோர் அடையாளம். என்று இராமன், சீதையைத் தேடிக் காண அனுமனை அனுப்பிய போது. இச்செய்தியை அடையாளமாகக் கூறியனுப்பினான்.

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்
12.11.1949

மறைவு
25.01.2024




திருமதி. **சிகப்பி அண்ணாமலை** அவர்கள்

இராயவரம்

எனது தாயார் சிகப்பி ஆச்சி சில தினங்கள் உடல் நிலை சரியில்லாமல் இருந்து 25.01.2024 அன்று இயற்கை எய்தினார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னாரது ஆத்மா சாந்தி அடைய நானும், எனது குடும்பத்தினரும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கண்ணீருடன்...

மகன்: அடைக்கலவன் என்ற கண்ணன்
மருமகள்: சோலை அடைக்கலவன்
பேத்தி: சுவேதா அடைக்கலவன்
பேத்தி: சரண்யா அடைக்கலவன்
இவர்களுடன் பிரியமான பப்பி டோக்கியோ



# “நகரத்தார் திருமணம்”

(நகரத்தார் திருமண நடைமுறைகள் பற்றிய சிறப்புத் தொடர்)

-கட்டுரைத் தொகுப்பு: அண.சீனிவாசன், காரைக்குடி

பகுதி - 8

## பணம் எழுதுதல் :



திருப்பூட்டி முடிந்ததும், நேரத்தை அனுசரித்து மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகளும், பெண் வீட்டுப் பங்காளிகளும் தனித் தனியாக இருந்து பணம் எழுத வேண்டியது. ஒரு முக்காலியில் சருவச் சட்டி வைத்துப் பச்சைப் பாலை ஊற்றி, வெற்றிலையைக் கிள்ளிப்போட்டு அதில் ஒரு ரூபாய் நாணயத்தையும் போட்ட பின் பணம் எழுதவேண்டும்.

முதலில் அந்த வகை ஆட்கள், அப்புறம் பங்காளிகள், பிறகு உறவினர்களாகவும் பங்காளிகளாகவும் உள்ளவர்கள், பின்பு மாமக்காரர்களையும் எழுதிப் பின்பு சடங்குகாரர்கள் சம்பந்தப்புரங்களையும், உறவினர், நண்பர்களையும் எழுதி ஒன்றாகப் பணத்தைச் சிகப்புத் துணியில் முடிந்து, மாப்பிள்ளை வீட்டார் எழுதிய பணத்தை, மொய்ப் பண ஏட்டுடன் வெற்றிலை பாக்கு, மலர், எலுமிச்சம் பழம் உள்ள தாம்பாளத்தில் வைத்து, மாப்பிள்ளை, பெரியவர்கள், மாமக்காரர்கள் ஆகியோரிடம் கொடுத்து வணங்கி வாங்கிப் பின்னர், இளையவன் ஒருவன் மாப்பிள்ளையை வணங்க, இருவரும் சேர்ந்து அந்த மொய்ப்பண

முடிச்சு உள்ள தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் வைத்துப் பிறகு எடுத்துக் கொண்டு வந்து கணக்கில் வரவு வைத்துக் கொள்ள வேண்டும்.

இதே போல் பெண் வீட்டார்கள் எழுதிய மொய்ப்பண ஏட்டையும் தாம்பாளத்தில் வைத்துப் பெண்ணின் தகப்பனார் அல்லது பெண்ணின் அண்ணன், தம்பி, மாமக்காரர்களிடம் கொடுத்து, வாங்கி தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் வைத்துப் பிறகு எடுத்து வந்து, கணக்கில் வரவு வைத்துக் கொள்ள வேண்டும்.

### கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல் :

மணவறை முடிந்து நெற்கோட்டை தாண்டி வீட்டிற்குள் சென்று வந்ததும், நடுவாசலில் மணமக்கள் வந்து, ஆளுக்கொரு நாற்காலியில் அமரவேண்டும். மாப்பிள்ளை, பெண் இரு வீட்டுப் பெற்றவர்களும், பெரியோர்களும் ஒவ்வொருவராக அவர்கள் முன்வந்து நின்றவுடன் மாப்பிள்ளை, பெண் இருவரும் கீழே விழுந்து வணங்கி வாழ்த்துப் பெறுதலே இந்நிகழ்ச்சி.

### சீராட்டுக் கொடுத்தல் :



மணமகளுக்கு அவர் தகப்பனாரும் அவருடைய சகோதரர்களும் தருகின்ற பணம்தான் சீராட்டு. மணமகனை மணையில் உட்காரச் செய்து வள்ளுவப்பையில் (பாக்கு, மஞ்சள், எழுத்தாணி முதலியன வள்ளுவப் பையில் இருக்கும்) ஒவ்வொரு பெயராக படிக்க, மணமகளின் தந்தை ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு பிடிபாக்கு போடுவார்கள். இப்படி பிடிபாக்கு வள்ளுவப்பையில்

போட்டதும் அதை கட்டி முடிந்து, தாம்பாளத்தில் வைத்துப் பெரியவர்களிடம் கொடுத்து, மணமகன் திரும்ப பெற்றுக் கொள்வார். கடைசியாக மணமகனை விட இளையவர் ஒருவர் மணமகனை வணங்க இருவரும் அதை கொண்டுபோய் நடுவீட்டில் வைத்துவிட்டு வருவார்கள். கடைசியாக கணக்குப் பார்த்து சீராட்டுப்பணம் ஸ்ரீதனத்துடன் சேர்த்துக்கொள்ளப்படும்.

### மஞ்சள் நீராடுதல்:



மணமக்கள் இருவரும் நல்ல உடைகளைக் களைந்து விட்டு வேறு சாதாரண உடைகள் அணிந்து கொண்டு நடு வாசலில் ஒரு பெஞ்சின் மீது அமர வேண்டும். உள்ளூர் கோயில் வயிராவி மாப்பிள்ளைக்கு எண்ணை தொட்டு வைப்பார். பிறகு வயிராவி, கரைத்து வைத்திருக்கும் மஞ் சள் நீரை மாப்பிள்ளை, பெண்ணின் பாதங்களில் ஊற்றுவார். அப்போது மணமக்கள் தந்தையார் இருவரும் தங்களது ஆடை நுனிகளை மஞ்சள் நீரில் நனைத்துக் கொள்ளல் வேண்டும். இதுபோல் தாயார் இருவரும் மஞ்சள் நீரில் சேலை நுனிகளை நனைத்துக் கொள்ளல் வேண்டும். பிறகு மணமக்கள் நாணாளைக்குரிய புதிய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். அதன் பிறகு மணமகள் வீட்டுப் பெரியவர்கள் நீராலாத்தி எடுப்பார்கள்.

### நீராலாத்தி :

ஒரு சிறிய தாம்பாளத்தில் கொஞ்சம் தண்ணீர்விட்டு அதில் மஞ்சள் தூளையும், சுண்ணாம்பையும் கலந்து வெத்திலையை கிள்ளிப்போட்டிருப்பார்கள். இது செந்தூர் நிறத்தில்

இருக்கும். இதுவே நீராலாத்தியாகும்.



### காப்புக் கழற்றிக் கால் மோதிரம் அணிதல் (நாணாளைச் சடங்கு) :


பெண்ணை மணை மேல் நிற்க வைத்து மாப்பிள்ளையின் தாயார் பெண்ணுக்குத் தன் கையில் அணிந்துள்ள காப்பைக் கழற்றி அணிவித்து, பெண்ணின் (இரண்டாவது) கால் விரல்களின் மிஞ்சி (கால் மோதிரம்) அணிவிக்கவேண்டும். பிறகு திருப்பூட்டிய பிறகு செய்து கொள்ளும் சடங்கைப் போல் மாப்பிள்ளையின் தாயார் சடங்கு செய்து கொள்ள வேண்டும்.

### காப்பு அவிழ்த்தல் :

மாப்பிள்ளை பெண் இருவருக்கும் அவரவர் மாமக்காரர்கள், இருவர் கையிலுள்ள ஐயரால் முடியப்பட்ட காப்பு இரண்டையும், தனித் தனியாக அந்தந்த மாமக்காரர் அவிழ்த்து தாம்பாளத்தில் வைத்து விடவேண்டும்.

– தொடரும்...

படங்கள் : உ. சிறுவயல் AL.திருநாவுக்கரசு



நகரத்தார்கள் பயன் பெறும் வகையில் நகரத்தார் சமூக திருமண நடைமுறைகள் பற்றி வெளிவந்த சிறப்பு வெளியீடான நகரத்தார் திருமண நடைமுறை கையேடு புத்தகம் விலைக்கு வேண்டுவோர் கட்டுரை தொகுப்பாளர் திரு.அண .சீனிவாசன் அவர்களை 94443 44022 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

# வாராரு வாராரு அழகன் முருகன் வாராரு ...!!!




வேல்வேல் வேல்வேல் வேல்முருகா வேல்
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்

வாராரைய்யா வாராரு வேலன் வாராரு–வேழமுக
இளவல் இங்கு விரைந்து வாராரு
ஆறுமுக வேலன் உண்மையறிய வாராரு
ஆறுபடை வீட்டைவிட்டு இறங்கி வாராரு

செட்டிமக்கள் சிக்கனத்தை மெச்ச வாராரு–அவர்
நேர்மை நாணயத்தை நோக்க வாராரு
நாச்சியாரின் நற்பண்பு அறிய வாராரு
விருந்தோம்பல் அறிந்திட விருந்தாளி ஆவாரு

நாட்டுக்கோட்டை நகரத்தார் இல்லம் வாராரு
ஆச்சிமார்கள் பேசும் தமிழைக் கேட்க வாராரு
கட்டிமுடியும் அழகினைக் காண வாராரு
கெட்டிக்கார குணமறிந்து வியந்து போவாரு



முகப்பில் நின்று வரவேற்கும் பண்பை ரசிப்பாரு
விசாலமான வளவைக் கொஞ்சம் வளைய வருவாரு
படைக்கும் வீடு தனி சிறப்பைத் தெரிந்து கொள்வாரு... அங்கு
காவடியும் கண்டு உள்ளம் கனிந்திடுவாரு

பரிவுடனே உபசரிக்கும் பாங்கைக் காண்பாரு
உண்மை பக்தி ஈகைகுணம் அறிந்து கொள்வாரு
அத்தனையும் அறிந்த பின்பு என்ன செய்வாரு–வீட்டைவிட
விசாலமான (நும்)மனதில் தங்க விரும்பிடுவாரு

நம்மை சீரோடும் சிறப்போடும் வாழ வைப்பாரு–நம்
பேரோடு புகழ் சேர வழிவகையும் செய்வாரு
வேல்வேல் வேல்வேல் வேல்முருகா வேல்
வேல்முருகா வேல்முருகா வேல்முருகா வேல்



அரு. சிவகாமி இராமனாதன்
ஒக்கூர், நவிமும்பை

# பச்சை பயறு கிரேவி

உங்கள் வீட்டில் சப்பாத்தி செய்யப் போகிறீர்களா? எப்போதும் சப்பாத்திக்கு ஒரே மாதிரி உருளைக்கிழங்கு மற்றும் பிற காய்கறிகளைக் கொண்டு சைடு டிஷ் செய்து போரடித்துவிட்டதா? உங்கள் வீட்டில் பச்சை பயறு உள்ளதா? அப்படியானால் அந்த பச்சை பயறைக் கொண்டு ஒருமுறை கிரேவி செய்யுங்கள். இந்த பச்சை பயறு கிரேவி சப்பாத்தியுடன் மட்டுமின்றி, சாதத்துடன் சாப்பிடவும் அற்புதமாக இருக்கும். மேலும் இது சத்தான ரெசிபியும் கூட. குழந்தைகள் விரும்பி சாப்பிடும் வகையிலும் இருக்கும்.






உங்களுக்கு பச்சை பயறு கிரேவியை எப்படி செய்வதென்று தெரிந்து கொள்ள வேண்டுமா? பச்சை பயறு கிரேவி ரெசிபியின் எளிய செய்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் படித்து செய்து சுவைத்து எப்படி இருந்தது என்று எங்களுடன் உங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

## தேவையான பொருட்கள்:

- பச்சை பயறு – 1 கப்
- எண்ணெய் – 2 டேபிள் ஸ்பூன்
- சீரகம் – 3/4 டீஸ்பூன்
- பட்டை – 2 துண்டு
- கிராம்பு – 4
- பிரியாணி இலை – 2
- பெரிய வெங்காயம் – 4 (பொடியாக நறுக்கியது)
- இஞ்சி பூண்டு பேஸ்ட் –1 1/2 டீஸ்பூன்
- தக்காளி – 3 (பொடியாக நறுக்கியது)
- குழம்பு மிளகாய் தூள் – 1 1/2 டீஸ்பூன்
- மஞ்சள் தூள் – 1/4 டீஸ்பூன்
- உப்பு – சுவைக்கேற்ப
- தண்ணீர் – தேவையான அளவு
- பூண்டு – 2 பல் (பொடியாக நறுக்கியது)
- கொத்தமல்லி சிறிது

## செய்முறை:

- முதலில் ஒரு வாணலியை அடுப்பில் வைத்து, அதில் பச்சை பயறை சேர்த்து சற்று நிறம் மாறி நல்ல வாசனை வரும் வரை வறுத்து இறக்கி, நீரில் கழுவி தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.

- பின்னர் ஒரு குக்கரை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றி சூடானதும், சீரகம் சேர்த்து நன்கு பொரிந்ததும், பட்டை, கிராம்பு, பிரியாணி இலை சேர்த்து தாளிக்க வேண்டும்.
- பின்பு அதில் வெங்காயத்தை சேர்த்து நன்கு பொன்னிறமாகும் வரை வதக்க வேண்டும்.
- பின் அதில் இஞ்சி பூண்டு பேஸ்ட்டை சேர்த்து பச்சை வாசனை போக வதக்க வேண்டும்.
- அடுத்து தக்காளியை சேர்த்து நன்கு மென்மையாகும் வரை வதக்க வேண்டும்.
- பிறகு அதில் குழம்பு மிளகாய் தூள், மஞ்சள் தூள் மற்றும் சுவைக்கேற்ப உப்பு சேர்த்து கிளறி, கழுவி வைத்துள்ள பச்சை பயறை சேர்த்து கிளறி விட வேண்டும்.
- பின் அதில் பச்சை பயறு வேக தேவையான அளவு நீரை



ஊற்றி கிளறி, குக்கரை மூடி, 7-8 விசில் விட்டு இறக்கிக் கொள்ள வேண்டும்.

- விசில் போனதும் குக்கரைத் திறந்து, மத்து கொண்டு லேசாக மசித்து விட வேண்டும். பின் மீண்டும் குக்கரை அடுப்பில் வைத்து அதில் பூண்டு பற்களை சேர்த்து 2 நிமிடம் வேக வைத்து இறக்கி, கொத்தமல்லியைத் தூவினால், சுவையான பச்சை பயறு கிரேவி தயார்.

பொதுவாக நாம் நாண், ஃபுல்கா, சப்பாத்தி மற்றும் பூரியை பல விதமான கிரேவிகலுடன் சுவைத்திருப்போம். அதில் பலவற்றை தொடர்ந்து செய்து சுவைத்து சலித்தே போயிருப்போம். ஆனால் நாம் இந்த இதழில் கண்ட பச்சை பயறு கிரேவி , வழக்கமாக செய்து சுவைக்கும் கிரேவிகலுக்கு ஒரு அருமையான மாற்று. அது மட்டுமின்றி இதன் சுவையும் மிகவும் அட்டகாசமாக இருக்கும். இதை ஒரு முறை சுவைத்து விட்டால் இதை கட்டாயம் மீண்டும் செய்து தர சொல்லி உங்கள் குடும்பத்தார் கேட்பது உறுதி.






உமாராணி சொக்கலிங்கம்
நற்சாந்துப்பட்டி - ஈரோடு

இந்தப் பகுதியில் நா ஊறும் நகரத்தார் ரெசிபிகளுடன், நம் ஆச்சிகளின் கைப்பக்குவ உணவு வகைகளின் செய்முறையினை அறியலாம். ஆச்சிகள் தங்கள் ரெசிப்பிகள் இந்தப் பகுதியில் இடம் பெற செய்ய தங்களின் படைப்புகளை தங்களது விவரங்களுடன் naamnagarathar@outlook.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும் அல்லது 9791776534 என்ற எண்ணிற்கு வாட்சப் செய்யவும்

நல்லவை சொல்லும் நகரத்தார் படைப்புகள் – 3

# கொரட்டியார் வீட்டு பொதுப் படைப்பு



V.A. நாராயணன் ,
காரைக்குடி

நகரத்தார் குலத்தில் படைப்புகள் என்பது ஒரு வழிபாட்டு முறையாகும். வாழும் காலத்திலேயே உறவுகளை உதாசீனப்படுத்தி விடும் காலம் இது. எதிர்காலத்தில் இப்படியெல்லாம் வரும் என்று நினைத்துத்தானோ என்னவோ ஆறேழு தலைமுறைக்கு முன்பே, ஆண்டுக்கு ஒருமுறை முன்னோர்களுக்கு படையலிட்டு வணங்கும் வழக்கத்தை வைத்திருக்கிறார்கள் நகரத்தார்கள். இதற்காக உருவானது தான் படைப்பு மற்றும் படைப்பு வீடு.

வாழும் காலத்திலேயே உறவுகளை உதாசீனப்படுத்தி விடும் காலம் இது. எதிர்காலத்தில் இப்படியெல்லாம் வரும் என்று நினைத்துத்தானோ என்னவோ ஆறேழு தலைமுறைக்கு முன்பே, ஆண்டுக்கு ஒருமுறை கிராமத்து குலதெய்வ கோயில் தெய்வங்கள் மற்றும் முன்னோர்கள் படையலிட்டு வணங்கும் வழக்கத்தை வைத்திருக்கிறார்கள் நகரத்தார்கள்.

எந்த ஊரில் இருந்தாலும், வாழ்ந்து செழித்த முன்னோர்களை வருங்கால சந்ததிகள் மறந்துவிடக் கூடாது என்பதற்காகவே நகரத்தார்களிடையே ஆண்டுக்கு ஒருமுறை இப்படைப்பு குடும்ப அளவிலும், குடி அளவிலும், பங்காளிகள் அளவிலும், ஊர் அளவிலும் கொண்டாடப்படுதல் உண்டு.

படைப்பு என்றால் ஒரு குடும்பத்தின் அத்தனை கிளைகளும், பங்காளிகளும் எந்த தேசத்தில் இருந்தாலும் தவறாமல் வந்து விடுவார்கள். சுய விருப்பு,வெறுப்புகளை அறவே களைந்து சமூக நலத்திற்காக நடைபெறும் கூட்டு வழிபாட்டின்

பிரதிபலிப்புதான் இந்த படைப்பு .பல்வேறு ஊர்களில் இருந்து வரும் பங்காளிகள் அனைவரும் ஒன்று கூடி நடத்தும் படைப்பு நகரத்தார்களின் ஒற்றுமையின் வெளிப்பாடு. வருடம் ஒருமுறை நடைபெறும் இந்நிகழ்ச்சி பல்வேறு ஊர்களில் இருந்து வரும் நகரத்தார்களுக்கு சமூகத்தின் பிணைப்புப் பாலமாக திகழ்கிறது என்றால் அது மிகையாகாது .

படைப்பு வீடுகளில் அனைவரும் ஒன்றுகூடும்போது இந்த மனத்தாபங்கள் எல்லாம் பஞ்சாய் பறந்துபோய் விடுகிறது. 'அம்மான், அயித்தே, ஆச்சி, பெரியப்பச்சி , சின்னப்பச்சி' என்று உறவுகளை நேரில் பார்த்ததும் நெகிழ்ந்துவிடும் இவர்கள், யாருக்காக இங்கே வந்திருக்கிறோம் என்பதை வளரும் பிள்ளைகளுக்குப் படைப்பு வீட்டில் வைத்துச் சொல்லிக் கொடுக்கிறார்கள். வளர்ந்த பிள்ளைகள், 'ஃபேமிலி ட்ரீ' வரைந்து, வளரும் பிள்ளைகளுக்கு குடும்பத்தின் பாரம்பரியம் படிக்கிறார்கள்.

நமது நகரத்தார் பண்பாட்டிற்கு பெருமை சேர்க்கும் நமது படைப்பு முறைகளைப் பற்றி நாமும் , இன்றைய வளரும் தலைமுறையினரும் அறிந்து கொள்வது அவசியம் . இம்முனைப்பில் நாம் நகரத்தார் மின்னிதழ் தனது பங்களிப்பாக ' நல்லவை சொல்லும் நகரத்தார் படைப்புகள் ' எனும் கட்டுரைத் தொடர் வாயிலாக நம் 76 ஊர்களில் நடைபெறும் படைப்புகள் குறித்து வெளியிட்டு வருகிறது.

இத்தொடர் வரிசையில் இந்த இதழில் காரைக்குடியில் வசிக்கும் – மாத்தூர் அரும்பாக்கூருடையார் நகரத்தாரில் கொரட்டியர் வகையினர் நடத்தி வழிபடுகிற கொரட்டியர் பொதுப் படைப்பு பற்றி பார்க்க உள்ளோம் .

இந்த ஆண்டு கொரட்டியர் வீட்டு பொதுப் படைப்பு மாசி 10 ,11 (22.02.2024 , 23.02.2024) தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது .

## கொரட்டியார் வீட்டு பொதுப் படைப்பு



காரைக்குடியில் வசிக்கும் கொரட்டியர் வகையினர் 200 புள்ளிகளை கொண்ட மாத்தூர் அரும்பாக்கூருடையார் பிரிவை சேர்ந்த நகரத்தார்கள் . இவர்கள் சுமார் 200 அல்லது 250 வருடங்கள் முன்பாக கொரட்டியில் வாழ்ந்த வந்த இவர்கள் இடம்பெயர்ந்து காரைக்குடி பகுதிக்கு வந்தார்கள்.

நகரத்தார்கள் எங்கு இடம்பெயர்ந்து சென்றாலும் தத்தம் குடும்பத்தார் கொண்டாடிக் கொண்டிருந்த கிராமத்து குலதெய்வ கோயில் வழிபாடு படைப்புகளை செய்து தவறாது வழிபட்டு வந்தார்கள் . அந்தவகையில் காரைக்குடி கொரட்டியார் வகையினர் குன்றக்குடியை பக்கமாக கொண்ட கொரட்டி ஊரில் உள்ள ஆரடிச்சாத்தையனார் ,அடைக்கத்தாள் , பதினெட்டாம்படி கருப்பர் மற்றும் நொண்டி கருப்பரை வழிபட்டு படைப்பு படைத்து வருகிறார்கள்.

ஆண்டு தோறும் கொரட்டியார் வகையினர் சிறப்பாக வழிபாடும் கொரட்டியார் வீட்டு பொது படைப்பு பற்றி இக்கட்டுரையில் விரிவாக காண்போம் .

வருடாந்திர படைப்பின் முதல் நாள்:-

பெரும்பாலும் வருடாவருடம் தை மாதம் இந்த பொதுப்படைப்பு நடைபெறும் படைப்புக்காரர் வீட்டை தீத்தி மொழுகி காரைக்குடி கிராம தெய்வங்களுக்கு விதைப்பு நெல்

காணிக்கையை கொடுத்தபின் காரைக்குடியில் எல்லா பங்காளிகளும் படைப்புக்காரர் வீட்டில் வந்த பின் அபிஷேக பொருட்களை எடுத்துக்கொண்டு கொரட்டி கோவிலுக்கு தீர்த்தம் கொண்டு வர சிலர் சென்று வருவார்கள்.



கொரட்டி கோவிலில் எல்லா சாமிகளுக்கும் அபிஷேகம் செய்து ஆறடி சாத்தையனார் சன்னதியில் அபிஷேக நீரை ஒரு பாத்திரத்திலும், தளிகை செய்த வெண் சாதத்தையும் அர்ச்சனை காளாஞ்சியையும் வேளார் கொடுப்பார். அவற்றை காரைக்குடியில் படைப்பு வீட்டில் கொண்டுவந்து வைத்து விடுவார்கள். வீட்டில் இருக்கும் மற்ற பங்காளிகள் அரிவாள் சுக்கு மாந்தடிக்கு அபிஷேகம் செய்து வைத்து பேழைகளில் உள்ள சேலை வேஷ்டிகளை அலசி காய வைத்தபின் மடித்து அடுக்கி படைக்கும் வீட்டில் வைப்பார்கள்.

பிறகு மதியம் சாப்பிட்ட பின், ஒரு சிலர் படைப்பு வீட்டிலேயே ஓய்வு எடுப்பார்கள். சிலர் தங்கள் வீடுகளுக்கு சென்று மாலை ஐந்து அல்லது ஆறு மணிக்கு படைப்பு வீட்டுக்கு வருவார்கள்.

### எண்ணெய் குளியல் / கழுத்துரு அலங்காரம்

40 ஆண்டுகளுக்கு முன்னர் சிலர் தவிர பெரும்பாலும் ஆண் பிள்ளைகள் வீட்டிலிருந்து புது துணிமணிகளைக் கொண்டு வந்து எண்ணெய் தேய்த்து குளிப்பார்கள்.



குளிப்பதற்கு படைப்புக்காரர் வீட்டு கேணியடியில் மழைநீர் சேகரிக்கும் பெரிய காசாணி அண்டாவில் வெந்நீர் போட்டு தருவார்கள். குளித்தபின் எல்லோருக்கும் சுவையான சூப், ரசம் தருவார்கள்.

படைப்பு வீட்டில் மாலை வேளையில் பெரியவர்களும், சில பெரிய பிள்ளைகளும் படைப்பு பள்ளயத்தில் வைக்க எல்லா வகை பழங்களையும் நறுக்கி தாம்பாளங்களில் வைக்கும் பணி நடக்கும். கிட்டத்தட்ட சாத்துக்குடி, ஆரஞ்சுபழம், மாதுளை, திராட்சை, கரும்பு, மாம்பழம், பலாப்பழம் அந்த தை மாதம் கிடைக்கும் பழங்களை நறுக்கி வைப்பார்கள்.

பெண்கள் படைப்பு அறைக்கு முன்பாக கூட்டடுப்பு வைத்து பெரிய பாத்திரங்களில் கத்திரிக்காய் வாழைக்காய் குழம்பும் பெரிய பித்தளை தவலையில் சர்க்கரை பொங்கல், வெண் சாதமும் வடித்து வைப்பார்கள். உளுந்து வடையும் சுட்டு, இவை எல்லாமும் பள்ளயம் போடும் வீட்டில் தயாரித்து வைத்திருப்பார்கள்.

சுமார் 5மணி பக்கமாக வழக்கமாக பள்ளயம் போடுபவர்கள்,படைப்பு அறையில் சாமி வேட்டிகளை பரப்பி,

அதன் மேல் சுக்குமாந்தடி அறுவாள்களை நிறுத்தி அவற்றின் மேல் புஷ்பங்களை, பூமாலைகளை வைத்து அலங்காரம் செய்வார்கள்.



முதல் நாள் பள்ளயம் பதினெட்டாம்படிக் கருப்பருக்கும் அடைக்காத்தாள் அம்மனுக்கும் போடப்படும்.அடைக்காத்தாளுக்கு எப்பவுமே சைவ படைப்புதான். முதல் நாள் போடப்படும் அடைகாத்தாள் பள்ளயத்தில் படைக்கின்ற வீட்டு ஆச்சியின் கருத்துருவை வைத்து அலங்காரம் செய்வார்கள்.

சாமி அலங்கார பள்ளயத்தின் முன் பெரிய தாட்டெலையை பரப்பி அடைகாத்தாளுக்கு சர்க்கரை சாதம் நெய், சர்க்கரையும் பழ வகைகளையும் பரப்பி கருப்பருக்கு வெண்சாதம், பருப்பு நெய் வார்த்து கத்தரிக்காய், வாழக்காய் பழ வகைகள் பரப்பியும் வடை மாலை சாத்தியும் பள்ளயம் நிறைவடையும். பிறகு படைப்பு வீட்டு முன் வாசலில் வாரத்தில் கட்டி இருக்கும் கொத்துமணி அடிப்பார்கள். சாமி படைப்பு வீட்டுக்குள் சாம்பிராணி தீப தூபம், அலங்கார தீபமும், ஐந்து முகம், ஒருமுக தீபமும் காட்டப் பெறும்.

படைக்கும் வீட்டின் முன் ஆண் பெண் பிள்ளைகள் எல்லோரும் வரிசையாக சென்று வீட்டுக்குள் சாமி கும்பிட்டு வருவார்கள். பின்பு படைப்பு வீட்டுக்கார ஆச்சிக்கு களுத்துருவை கட்டி, எல்லோரிடமும் ஆசி வாங்குவார்கள்.

### *படைப்பின் இரண்டாம் நாள்:*

இரண்டாம் நாள் படைப்பு நொண்டி ஐயா என்னும் நொண்டிக் கருப்பருக்கு. இரண்டாம் நாள் காலையில் முதல் நாள் படைப்புக்கு தீர்த்தம் எடுக்க சென்றது போல் இரண்டாம் நாள் இளங்குடி எனும் ஊரில் அங்கே உள்ள நொண்டி கருப்பருக்கு அபிஷேகம் அர்ச்சனை செய்து தீர்த்தம் கொண்டு வருவார்கள்.

### *கொரட்டியர் அற்புதம்*

தீர்த்தம் எடுக்கும் இளங்குடி நிகழ்வு பற்றி ஒரு செவிவழி கதை சொல்லப்படுகிறது.

கொரட்டி கோவிலுக்கு வந்த திருடர்கள் வெகு காலம் முன்னர் நொண்டி கருப்பர் அழகில் ஈர்ப்பு ஏற்பட்டு தூக்கிச் சென்றார்கள் வழியெல்லாம் கடந்து இலங்குடி கோவில் அருகே வந்ததும் நொண்டி கருப்பரை அங்கே வைத்து ஓய்வெடுத்தார்கள்.

இரவு கடந்து மறுநாள் அந்த கருப்பரை இளங்குடி கோவிலில் இருந்து எடுத்துப் போக முயலும் போது சுவாமி சிலையை அங்கிருந்த நகட்டவே முடியவில்லை. எனவே திருடர்கள் அந்த சாமியை அங்கே வைத்து போய் விட்டார்கள். பின்பு அது கொரட்டி கருப்பர் என தெரிந்து அந்தப் பெயரிலே ஒரு சன்னதி இலங்குடியில் அமைத்து வழிபடத் தொடங்கினார்கள்.



அதனால் கொரட்டி பங்காளிகள் அது தெரிந்து, அன்று முதல் இரண்டாம் நாள் படப்பு அந்த நொண்டிக் கருப்பருக்கு படைப்பதால் இலங்குடிக்கே சென்று கும்பிட்டு வந்தார்கள். அண்மையில்

எல்லோருமே அந்த நொண்டி ஐயாவை பார்க்க வேண்டும் என்று அந்த சுவாமியை கொரட்டி கோவிலில் தனி சன்னதி அமைத்து கும்பிட்டு, தீர்த்தம் எடுத்து, படைத்து வருகிறார்கள்.

காலையில் எல்லா பங்காளிகளும் முதல் நாள் போல் பேழையில் உள்ள வேஷ்டி கருங்கச்சைகிளை அலசி காயவைத்து மடித்து படப்பு வீட்டில் வைப்பார்கள்.

நொண்டிக் கருப்பருக்கு தாட்டெலையில் கருப்பட்டி பணியாரம், உளுந்து வடை பழ வகைகள்,வெண்சாதம் படைத்து நெய் வார்த்து பள்ளயம் போடப்படும். கருப்பருக்கு வடை மாலை சாத்தி வணங்குவார்கள்.

காய்கறிகள் எல்லாம் நறுக்கி பெண்கள் நெல் குத்தி,சொழகில் புடைத்து அரிசியாக்கி உரலில் இடித்து மாவாக்கி சலித்து வேண்டிய பணியாரத்திற்கு தக்கவாறு தயாரித்து வைப்பார்கள். பணியாரத்திற்கு தக்கபடி பாகு காய்ச்சி அதையும் பெண்கள் தயாரித்து வைப்பார்கள்.



இவையெல்லாம் செய்து முடிக்க மாலை 6:00 மணி ஆகிவிடும்.முந்தின நாள் போல் இன்றும் எண்ணெய் குளியல் நடக்கும் முதல் நாள் குளிக்காதவர்கள் இரண்டாம் நாளில் எண்ணெய் குளியல் செய்து கொள்வார்கள்

முன்பெல்லாம் படைப்பில் அசைவ குழம்பு. கறி படைக்கப்படும் என்று சொல்வார்கள் பிறகு எல்லா படைப்புமே சைவப் படைப்பாக மாறிவிட்டது. வழக்கம்போல் இரண்டு

பள்ளயம் போட்டு சுவாமி கும்பிடுவார்கள். எல்லோரும் சாமி கும்பிட்டு முடித்த பின் இரண்டு நாட்களிலும் பள்ளயம் நகட்டி வைத்தல் என்ற முறை செய்யப்படும்.

அதாவது சுவாமி பிரபஞ்ச இயற்கை வியாபிப்பால் பள்ளயத்தில் வைத்த பொருட்களை ஆவாகனம் செய்வதாக ஐதீகம் அப்படி தெய்வ சக்தி அருவுருவாக ஆவாகித்ததை பள்ளயம் நகட்டி வைப்பதன் மூலம் நாம் ஏற்று பிரசாதமாகக் கொள்கிறோம் என்று அந்த சடங்கு செய்யப்படும்.



பிறகு சுவாமி வீட்டுக்குள்ளே பாடுவார் முத்தப்பையா இயற்றிய தல்லாகுளக் கருப்பர் அகவல் என்ற பாடலை நன்கு பாடக்கூடிய பங்காளிகள் பாட ஒரு சில பெரியவர்கள் பேரில் அருள் வந்த ஆடி படைப்பு வீட்டு பத்தி வாசல் எல்லாம் ஆடி ஓடி அறுவாள் மேல் ஏறி படைப்பை ஏற்றுக் கொண்டேன் என்று சொல்லி, இன்னும் கேட்கும் சில பேர்களுக்கும் நல்வாக்கு சொல்வார்கள்.

பின் சுவாமி அலங்காறுதல் நடந்த பின் பள்ளயம் பிரித்து எல்லோரும் இரவு சாப்பாடோ, பலகாரமோ சாப்பிட்ட பின் படைப்பு நிறைவடையும்.

இந்தப் படைப்பு தொடங்கும் நாளிலோ அல்லது கொரட்டி செல்லும் நாளிலோ படைப்புக்கு புள்ளி ஒன்றுக்கு இத்தனை ரூபாய் என வரவு வைத்து படைப்பு செலவுகள் நடக்கும். இது தவிர முன் வருடங்களில் படைப்பில் மிஞ்சிய பணங்களும், ஏலம் விடும்போது வரும் பணங்களும், பிராத்தனையாக

பள்ளயத்தில் வைக்கும் பணங்களும் பங்காளிகளுக்குள்ளேயே டெபாசிட்டாக வைத்திருந்து அந்த பணத்திற்கு வட்டி கணக்கிட்டு அதையும் பொதுபடைப்பில் படைப்பு செலவுக்கு உபயோகப் படுத்துவார்கள். ஒவ்வொரு வருடமும் கொரட்டிக் கோவிலில் வழிபாடு நிறைவடைந்ததும் இரவு சாப்பாட்டுக்கு முன்னதாகவும் படைக்கும் வீட்டில் மூன்றாவது நாளிலும் ஏலம் இடுவது நடக்கும். இது ஒரு வேண்டுதலாகவும் ஆர்வமுடனும் காரிய சித்தியை உத்தேசங்கொண்டும் இளையோரும் பெரியவர்களும் மனமுவந்து ஏலம் எடுப்பார்கள்.

படைப்பும் ஒவ்வொரு பங்காளிகளும் திருமணம் நடக்கும் வரிசையில் படைப்பு புத்தகத்தில் பதிந்து வைப்பார்கள். அந்த வரிசையில் தான் படைப்பு நடைபெறும். திருமண நாளின் வரிசை முறைப்படி ஆண்டுதோறும் நடைபெறும் கொரட்டியார் வீட்டுப் பொதுப்படைப்பு தை மாதம் முதல் புதன் கிழமை கொரட்டி ஆலயத்திற்கு பங்காளிகள் அனைவரும் சென்று அபிஷேகம் அர்ச்சனை மாவிளக்கு வைத்து வழிபாடு செய்து வருவார்கள். தவிர்க்க இயலாத பொழுதுகளில்

வரிசைக்காரர்களின் தோதான நாட்களில் படைப்பு நடத்துவார்கள். கொரட்டிக் கோவிலுக்கு சென்று வந்த அடுத்த இரண்டு நாட்களில் வீட்டில் அடைக்காத்தாள் பதினெட்டாம் படிக் கருப்பருக்கு பள்ளயமிட்டுப் படைப்பதும் இரண்டாம் நொண்டி ஐயா என்னும் நொண்டிக் கருப்பருக்கு பள்ளயமிட்டுப் படைப்பதும் நடக்கும்.

இந்த படைப்புக்கு தாயபிள்ளைகளும் கல்யாணம் செய்து சென்ற பெண் பிள்ளைகளும் குடும்பத்தோடு வந்து சாமி தெரிசனம் செய்து வழிபடுவார்கள். பிரார்த்தனையாக வேண்டுதல்கள் செய்தும் உறவினரும் பங்காளிகளும் வழிபடுவது மிகச்சிறப்பாக. நடைபெற்றுவருகிறது.

# சிறுவாபுரி நகரவிடுதி மாதந்திர கிருத்திகை வழிபாடு



நமது சிறுவாபுரி நகர விடுதியில் கார்த்திகை மாத கிருத்திகை 20/01/2024 சனிக்கிழமை அன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7 மணிக்கு வேலுக்கு அபிஷேகமும் மதியம் 12 மணிக்கு மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

பக்தர்கள் திரளாக கலந்த இந்த நிகழ்வில் காலை மற்றும் மதியம் அன்னதானம் உபயதாரர்கள்

ஓ.சிறுவயல் திரு.Dr.அண்ணாமலைசெட்டியார்குடும்பத்தினர் ,தேவகோட்டை திரு.N.S.V.சோமசுந்தரம் செட்டியார் குடும்பத்தினர் மற்றும் அம்பத்தூர். திரு.பஞ்சாபகேசன் குடும்பத்தினர் சார்பில் நடைபெற்றது.

வழிபாடு ஏற்பாடுகளை நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் குழுவினர் செய்திருந்தனர்.


நகரத்தார் பெருமக்கள் சிறுவாபுரி மாத கிருத்திகை வழிபாட்டு அன்னதான நிகழ்வில் பங்கு கொள்ள

பின்வரும் நகரத்தார் சிறுவாபுரி பாதயாத்திரை டிரஸ்ட் அமைப்பின் அங்கத்தினர்களை தொடர்பு கொள்ளலாம் .

திரு.SP சிதம்பரம் புரவலர் (9444274720)
திரு.K.சிதம்பரம் தலைவர் (9080264411)
திரு.PR.மீனாட்சிசுந்தரம் செயலாளர் (9444183688)
திரு.முத்தையா சம்பத் பொருளாளர் (9710066980)

# மழலை மழைத்துளிகள்..!!!

குழந்தைகளுக்காக எழுதப் பட்டாலும்
அனைவருக்குமான கவிதைகளின் அணிவரிசை
இந்த மழலை மழைத்துளிகள்



கல்லல்
மீ.மணிகண்டன்
Texas, USA

## ஆசை எண்ணம் முயற்சி வெற்றி!



அலையோரம் விளையாட
... ஆசை இருக்குது
வலைவீசி மீன்பிடிக்க
... எண்ணம் இருக்குது
மலையேறி நிலவுபிடிக்க
... முயற்சி இருக்குது
நிலையாக மனதுவைக்க
... வெற்றி கிடைக்குது!

## பாப்பா கச்சேரி

ஒலியெழுப்பு மத்தளந் தட்டி
... டகட டகட டம்
இலைமடித்து ஊதல் ஊது
... பிப்பீ பிப்பீ பீப்
சலங்கையிட்டு குதித்து ஆடு
... ஜலஜ லஜல ஜல்
இலவசந்தான் கச்சேரியை
... ரசிக்க வாருங்கள்!



# வைத்தீஸ்வரன் கோவில் பாதயாத்திரை 2024
# பயண விபரம்

உ
சிவமயம்



அன்புடையீர்.

வணக்கம் நிகழும் மங்களகரமான குரோதி வருடம் சித்திரை மாதம் 4ம் தேதி, 17.04.2024 புதன்கிழமை தொடங்கி சித்திரை மாதம் 10ம் தேதி 23.04.2024 செவ்வாய் கிழமை வைத்தீஸ்வரன் கோயில் சென்றடையும் பயண விபரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 17.04.2024 | புதன்கிழமை | பி.அழகாபுரி, கீழச்சீவல்பட்டியில் இருந்து புறப்படுதல் |
| 18.04.2024 | வியாழக்கிழமை | புதுக்கோட்டை |
| 19.04.2024 | வெள்ளிக்கிழமை | கந்தர்வகோட்டை |
| 20.04.2024 | சனிக்கிழமை | பூண்டி |
| 21.04.2024 | ஞாயிற்றுக்கிழமை | திருவலஞ்சுழி |
| 22.04.2024 | திங்கள் கிழமை | மூவலூர் |
| 23.04.2024 | செவ்வாய் கிழமை | வைத்தீஸ்வரன் கோவில் சென்றடைதல் |



# எண்ணங்களின் சக்தி



சிந்தனை என்பது ஒரு சக்தி – ஆற்றலின் வெளிப்பாடு – காந்தம் போன்ற ஈர்ப்பு சக்தியைக் கொண்டுள்ளது.'–வில்லியம் வாக்கர் அட்கின்சன்

நீங்கள் வைத்திருக்கும் வலிமையான மற்றும் பயனுள்ள சக்திகளில் ஒன்று மன ஆற்றல். இந்த சக்தி உங்கள் எண்ணங்களைக் கொண்டுள்ளது.

உங்கள் மனதில் நடக்கும் எண்ணங்களே உங்கள் வாழ்க்கையில் நடக்கும் அனைத்திற்கும் காரணம். உங்கள் முக்கிய எண்ணங்கள் உங்கள் நடத்தை மற்றும் அணுகுமுறையை பாதிக்கின்றன மற்றும் உங்கள் செயல்களையும் எதிர்வினைகளையும் கட்டுப்படுத்துகின்றன. உங்கள் எண்ணங்கள் எப்படி இருக்கிறதோ, அப்படியே உங்கள் வாழ்க்கையும் இருக்கிறது.

**நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதில் கவனமாக இருங்கள்.**

எண்ணங்கள் உங்கள் மனதின் திரையில் திரையிடப்படும் வீடியோ போன்றது., நீங்கள் வாழும் வாழ்க்கை மற்றும் நீங்கள் சந்திக்கும் அனுபவங்களை தீர்மானிக்கிறது. உங்கள் வாழ்க்கையில் மாற்றங்களைச் செய்ய, நீங்கள் அதிகம் விரும்பும் வேறு வீடியோவை மனதில் இயக்க வேண்டும்.

## எண்ணங்களின் சக்தி ஒரு படைப்பு சக்தி

இந்த சக்தியைப் பயிற்றுவித்து பலப்படுத்தலாம். உங்கள் வாழ்க்கையில் மாற்றங்களைச் செய்வதற்கும் மற்றவர்களின் மனதில் செல்வாக்கு செலுத்துவதற்கும் இதைப் பயன்படுத்தலாம்.

விதைகளை நட்டு, தண்ணீர் ஊற்றி, உரம் கொடுத்தால், அவை ஆரோக்கியமாகவும் வலிமையாகவும் வளரும். எண்ணங்கள், விதைகளைப் போலவே, உங்கள் வாழ்க்கையில் வளரும் மற்றும் வெளிப்படும் இயற்கையான போக்கு உள்ளது.

உங்கள் எண்ணங்கள் உங்கள் நனவான மனதிலிருந்து உங்கள் ஆழ் மனதிற்கு செல்கிறது, இது இந்த எண்ணங்களுக்கு ஏற்ப உங்கள் செயல்களை பாதிக்கிறது. உங்கள் எண்ணங்கள் மற்ற மனங்களுக்கும் செல்கிறது, இதன் விளைவாக, உங்களுக்கு உதவக்கூடிய நிலையில் உள்ளவர்கள், சில சமயங்களில், ஏன் என்று கூட தெரியாமல், அவர்களின் உதவியை உங்களுக்கு வழங்கலாம்.

இது சில விசித்திரமான மற்றும் நம்பமுடியாததாக இருக்கலாம். இந்த வார்த்தைகளை நீங்கள் ஏற்க வேண்டியதில்லை, ஆனால் நீங்கள் நினைக்கும் எண்ணங்களையும், நீங்கள் வாழும் வாழ்க்கையையும்

பகுப்பாய்வு செய்தால், மனதைப் பற்றிய சுவாரஸ்யமான விஷயங்களைக் கண்டுபிடிப்பீர்கள்.

உங்கள் மனதின் சக்தி பிரபஞ்சத்தின் படைப்பு சக்தியின் ஒரு பகுதியாகும், அதாவது உங்கள் எண்ணங்கள் அதனுடன் இணைந்து செயல்படுகின்றன. நீங்கள் உலகளாவிய மனதின் வெளிப்பாடு.

நீங்கள் ஒரே எண்ணத்தை மீண்டும் மீண்டும் செய்யும்போது, ஏதாவது ஒரு வழியில், இந்த வலிமையான சக்தி உங்கள் எண்ணங்களை நனவாக்க உதவுகிறது.

**உங்கள் எண்ணங்களின் சக்தியை எவ்வாறு பயன்படுத்துவது?**

- நீங்கள் எதைச் சாதிக்க விரும்புகிறீர்களோ அதன் சரியான காட்சியைக் காட்சிப்படுத்துங்கள் .
- இந்த மனக் காட்சிகளில் திறம்பட்ட வாழ்க்கைக்கான எண்ணங்களை வைக்கவும்.
- நம்பிக்கையுடனும் கவனத்துடனும் உங்கள் காட்சிப்படுத்தலை அடிக்கடி செய்யவும் , உங்கள் ஆழ்மனம் இந்த மனக் காட்சிகளை உண்மையான அனுபவங்களாக ஏற்றுக்கொள்ளும். ஆழ் மனம் உண்மையான மற்றும் கற்பனை அனுபவங்களை வேறுபடுத்துவதில்லை, மேலும் இரண்டையும் உண்மையானதாக ஏற்றுக்கொள்கிறது. இது மாற்றங்களைச் செய்யத் தொடங்கும் மற்றும் வாய்ப்புகளை ஈர்க்கும், உங்கள் யதார்த்தத்தை உங்கள் ஆழ் மனதில் உள்ள படங்களுடன் பொருத்தமாக்குகிறது.

நீங்கள் அடிக்கடி பார்க்கும் செயல்கள், சூழ்நிலைகள்

மற்றும் பொருள்கள், இறுதியில், இயற்கையான வழியில் வெளிப்படும். இந்த வெளிப்பாடு ஒரே இரவில் நடக்காது. இதற்கு நேரம் தேவை, மேலும் நீங்கள் எவ்வளவு லட்சியமாகவும் நேர்மையாகவும் இருக்கிறீர்கள், இந்த செயலில் நீங்கள் எவ்வளவு நேரத்தையும் கவனத்தையும் செலுத்துகிறீர்கள் என்பதைப் பொறுத்தது.

எதிர்மறை பழக்கங்களை மாற்றவும், புதிய, நேர்மறை பழக்கங்கள் அல்லது திறன்களை உருவாக்கவும் இந்த செயல்முறையை நீங்கள் பயன்படுத்தலாம். பணம் மற்றும் உடைமைகளை ஈர்ப்பதற்கும், வேலையில் பதவி உயர்வு பெறுவதற்கும், வணிகத்தை உருவாக்குவதற்கும், ஆரோக்கியம் மற்றும் உறவுகளை மேம்படுத்துவதற்கும், சூழ்நிலைகளை மாற்றுவதற்கும் மற்றும் நடைமுறையில் கிட்டத்தட்ட எல்லாவற்றுக்கும் நீங்கள் இதைப் பயன்படுத்தலாம்.

நீங்கள் நினைக்கும் எண்ணங்களுக்கு கவனம் செலுத்துங்கள். எதிர்மறை எண்ணங்களை நிராகரிக்க உங்களால் முடிந்த அனைத்தையும் செய்யுங்கள், மேலும் நல்ல, மகிழ்ச்சியான மற்றும் நேர்மறையான முடிவுகளைத் தரும் எண்ணங்களை மட்டுமே உங்கள் மனதில் அனுமதிக்கவும். இந்த முயற்சி வாழ்க்கையை வளம் பட வாழ உதவும் .

நன்றி : **Remez Sasson** (மூலம்)

தமிழில் : இராம .சொக்கலிங்கம்

நாம் நகரத்தார் டெலிகிராம் சேனலில்
இணைந்து உங்கள் மொபைலிலேயே நமது
மின்னிதழை மாதமிரு முறை பெற்றிடுவீர்
t.me/naamnagarathar
Join Telegram

# பணம் சம்பாதிப்போம் பங்குச் சந்தையில்...



க .ஹர்ஷவர்த்தினிஸ்ரீ (நெற்குப்பை) நகரத்தார்கேப்பிட்டல் சென்னை

நமது நாம் நகரத்தார் மின்னிதழ் வாசகர்கள் பயன் பெறும் வகையில் சென்னை நகரத்தார் கேப்பிட்டல் நிபுணர் ஹர்ஷவர்த்தினிஸ்ரீ ( நெற்குப்பை ) எழுதும் இந்த தொடரில் பங்குசந்தை தொடர்பான அடிப்படைகளையும் , ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட பங்கின் பகுப்பாய்வினையையும், குறுகிய கால பங்குகளுக்கான பரிந்துரைகளையும் பார்க்கலாம்.

இந்த இதழில் ஒரு நிறுவனத்தைபற்றிய விரிவான பகுத்தாய்வு.

SUZLON

POWERING A GREENER TOMORROW

## Suzlon Energy Ltd.,

### நிறுவன வரலாறு :

இந்நிறுவனம் 1995 ஆம் ஆண்டு திரு. துளசி தந்தி என்பவரால் தொடங்கப்பட்டது. இயந்திர பொறியியல் துறையில் பட்டம் பெற்றிருந்த போதும் அவர் தனது பாரம்பரிய தொழிலான ஜவுளி தொழிலில் ஈடுபட்டு வந்தார். ஜவுளி தொழில், மின்சாரத்தை அடிப்படையாகக் கொண்டு செயல் பட்டு வருவதால், அதிக இயக்க செலவுகள் மற்றும் மின்சார பற்றாக்குறை அதிகரித்து வந்ததால் ,

நிரந்தர தீர்வுகளை தேடல் தொடங்கினார். தேடலுக்கான தீர்வு சுஸ்லான் எனர்ஜி.

ஜவுளி தொழிலுக்கான மின்சார தேவையை பூர்த்தி செய்ய முதலில் இரண்டு காற்றாலைகளை வாங்கினார். அவரது இந்த முயற்சி பலராலும் பாராட்டப்பட்டதால், தனது பாரம்பரிய தொழிலான ஜவுளி தொழிலை விட்டுவிட்டு சுஸ்லான் எனர்ஜியில் முழு கவனத்தையும் செலுத்தி வந்தார்.

பல ஆண்டுகளாக, பல தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் மற்றும் உற்பத்தியில் சிறந்து விளங்குவதன் மூலம் சுஸ்லான் ஒரு முன்னணி காற்றாலை ஆற்றல் ப்ளேயராக தன்னை நிலை நிறுத்தி கொண்டுள்ளது.

சுஸ்லான் எனர்ஜி ஆறு கண்டங்களில் 17 நாடுகளில் ஏறக்குறைய 5800 தொழிலாளர்களை கொண்டு இயங்கி வருகிறது.

இந்நிறுவனத்தின் காற்றாலை சுமார் 19.7 ஜிகாவாட் ஆற்றல் திறனை கொண்டுள்ளது. இந்தியாவில் அதன் ஒட்டு மொத்த சந்தைப் பங்கு 33%ஆக உள்ளது.

நிறுவனத்தின் அடிப்படை விவரங்கள்:

சந்தை மூலதனம் ரூபாய் 60304.21கோடி
முக மதிப்பு ரூபாய் 2
புத்தக மதிப்பு ரூபாய்

**PE sþ>D 87.20**

**ROCE 20.8%**

**ROE 259.2%**

**Debt to Equity .04**

**EPS .50**

**Key Metrics**

| | |
|---|---|
| PE Ratio (x)<br>87.20 | EPS - TTM (₹)<br>1.90 |
| MCap (₹ Cr.)<br>60,304.21 | Sectoral MCap Rank<br>9 |
| PB Ratio (x)<br>55.86 | Div Yield (%)<br>0.00 |
| Face Value (₹)<br>2.00 | Beta<br>2.62 |
| VWAP (₹)<br>44.03 | 52W H/L (₹)<br>50.60 / 6.95 |

**Suzlon Energy Share Price Returns**

| | |
|---|---|
| 1 Day | -0.8% |
| 1 Week | -2.12% |
| 1 Month | -9.57% |
| 3 Months | 11.55% |
| 1 Year | 432.73% |
| 3 Years | 638.66% |
| 5 Years | 638.66% |

இந்நிறுவனத்தின் தற்போதைய சந்தை மதிப்பு ரூபாய் 60304.21 கோடி ஆகும். கடந்த சில ஆண்டுகளாக சுஸ்லான் எனர்ஜி இன் நிதி நிலைமை கேள்வி குறியாக இருந்ததன் காரணமாக இப்பங்கின விலை பல ஆண்டுகளாக ரூபாய் பத்திற்கும் கீழாக வர்த்தகம் செய்துள்ளது. இவ்வாறாக இருந்தபோதிலும், தற்போதைய நிதி நிலையில் நல்ல வளர்ச்சியை காண முடிகிறது.

சுஸ்லான் எனர்ஜி இந்தியா முழுவதும் அதன் அனைத்து உற்பத்தி வசதிகளையும் கொண்டுள்ளது. காற்றாலைகளை நிறுவுவதற்கு, காற்றாலை ஜெனரேட்டர்கள் மற்றும் பிளேடுகள் முதல் கோபுரங்கள் வரை ஒவ்வொரு உதிரி பாகங்களை உற்பத்தி செய்து வருகிறது.

சந்தையில் அதன் தலைமை நிலையைத் தக்க வைக்க செங்குத்தாக ஒருங்கிணைக்கப்பட்ட குறைந்த விலை விநியோகச் சங்கிலியைப் பின்பற்றுகிறது.

இது இந்தியாவில் பொதுவாகக் காணப்படும் குறைந்த காற்று தளங்கள் உட்பட பல்வேறு தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறு .6னிநி முதல் 3+MW வரையிலான காற்றாலை விசையாழி ஜெனரேட்டர்களை உற்பத்தி செய்கிறது.

இந்நிறுவனம் தனது செயல் பாடுகளை நான்கு வணிகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அவையாவன, காற்றாலை விசையாழி ஜெனரேட்டர்களின் விற்பனை, ஃபவுண்டரி & ஃபோர்ஜிங், ஆபரேஷன் மற்றும் மேனேஜ்மென்ட் சர்வீசஸ் மற்றும் பிற.

காற்றாலை விசையாழி ஜெனரேட்டர்களின் விற்பனை இந்நிறுவனத்தின் வருவாயில் பெரும் பகுதியாக உள்ளது. சரிந்த நிதி நிலையை சரி செய்ய இந்நிறுவனம் பல்வேறு உத்திகளை பின் பற்றி வந்தது. அவற்றில் சில.. கடந்த மே மாதம் 24, 2022 அன்று, ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா தலைமையிலான 16 கடன் வழங்குநர்கள் கூட்டமைப்புக்கு பதிலாக யூசிளீ லிமிடெட் தலைமையிலான மற்றொரு இரண்டு கடன் வழங்குநர்கள் கூட்டமைப்புடன் சுஸ்லான் கடன் மறு நிதியளிப்பு ஒப்பந்தத்தை முடித்தது.

இதன் தொடர்ச்சியாக அக்டோபர் 20,2022 அன்று சுஸ்லான் ரூபாய் 1200 கோடி உரிமை வெளியீட்டை வெற்றிகரமாக முடித்துள்ளது. இதில் ரூபாய் 300 கோடி கடன் குறைப்புக்காக பயன்படுத்தியுள்ளது. மீதமுள்ள தொகையை நிறுவனத்தின் செயல்பாட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பயன் படுத்தி வருகிறது.

இந்நிறுவனத்தின் பங்குகள் ப்ரமோட்டர் வசம் 13.29% உள்ளது. அவர்கள் தங்கள் பங்கினை அடமாணத்தில் இருந்து முழுவதுமாக மீட்டியுள்ளது அதன் நிதி நிலை முன்னேற்றத்தை உறுதி செய்கிறது. **FIIS** தங்கள் வசம் 17.83% பங்குகளை வைத்துள்ளது. அது கடந்த காலாண்டை விட கணிசமான அளவில்

உயர்த்தி உள்ளது. **DIIS** தங்கள் வசம் 3% பங்குகளை வைத்துள்ளது. இது கடந்த காலாண்டை விட கணிசமான அளவு குறைந்துள்ளது. மீதமுள்ள 65,88% பங்குகள் பிறர் வசம் உள்ளது.

இந்நிறுவனத்தின் வருவாய் கடந்த மூன்று காலாண்டில் அதிகரித்து வருகிறது. ரூபாய் 19.90 கோடி நட்டத்தில் இருந்து தற்போது ரூபாய் 4.92 மற்றும் 9.87 கோடியை ஈட்டியுள்ளது. இந்நிறுவனத்தின் மொத்த இலாபம் கடந்த காலாண்டில் ரூபாய் 7.16 கோடி. இந்த காலாண்டில் கணிசமாக உயர்ந்து ரூபாய் 12.93 கோடியை ஈட்டியுள்ளது. **EPS** கடந்த காலாண்டை விட இரு மடங்கு உயர்ந்து இருப்பது இந்நிறுவனத்தின் வளர்ச்சியை உறுதி செய்கிறது.

## INSIGHTS Suzlon Energy

**ROE Outperforming 5 Year Average**

**Company delivered ROE of 259.2% in year ending 31 Mar, 2023 outperforming its 5 year avg. of 5.57%. (Source: Consolidated Financials)**

**Topline Contraction**

**Sales de-grew by 9.29%. Company witnessed revenue contraction for the first time in last 3 years. (Source: Consolidated Financials)**

**Sell Signal: Bears back on track**

**20 day moving crossover appeared on Mar 01, 2024. Average price decline of -6.08% within 7 days of this signal in last 5 years.**

**Employee & Interest Expense**

**Company has spent 7.05% of its operating revenues towards interest expenses and 10.2% towards employee cost**

in the year ending 31 Mar, 2023. (Source: Consolidated Financials)

## Suzlon Energy Share Price Update

Suzlon Energy Ltd. share price moved down by -0.80% from its previous close of Rs 44.30. Suzlon Energy Ltd. stock last traded price is 43.95

## நிறுவனத்தின் நிதி நிலை:

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

**INSIGHTS**

**Topline Contraction**
Sales de-grew by 9.29%. Company witnessed revenue contraction for the first time in last 3 years. (Source: Consolidated Financials)

**Employee & Interest Expense**
Company has spent 7.05% of its operating revenues towards interest expenses and 10.2% towards employee cost in the year ending 31 Mar, 2023. (Source: Consolidated Financials)

| QUARTERLY \| ANNUAL | DEC 2023 | SEP 2023 | JUN 2023 | MAR 2023 | DEC 2022 |
|---|---|---|---|---|---|
| Total Income | 1,569.71 | 1,428.69 | 1,361.68 | 1,699.96 | 1,464.15 |
| Total Income Growth (%) | ↑9.87 | ↑4.92 | ↓-19.90 | ↑16.11 | ↑1.50 |
| Total Expenses | 1,352.30 | 1,282.55 | 1,198.60 | 1,290.44 | 1,300.28 |
| Total Expenses Growth (%) | +5.44 | ↑7.00 | -7.12 | ↓-0.76 | -2.31 |
| EBIT | 217.41 | 146.14 | 163.08 | 409.52 | 163.87 |
| EBIT Growth (%) | +48.77 | -10.39 | -60.18 | +149.91 | +46.85 |
| Profit after Tax (PAT) | 203.04 | 102.29 | 100.90 | 279.89 | 78.36 |
| PAT Growth (%) | ↑98.49 | +1.38 | -63.95 | +257.18 | +36.44 |
| EBIT Margin (%) | 13.85 | 10.23 | 11.98 | 24.09 | 11.19 |
| Net Profit Margin (%) | 12.93 | 7.16 | 7.41 | 16.46 | 5.35 |
| Basic EPS (₹) | 0.15 | 0.08 | 0.08 | 0.24 | 0.07 |

INCOME (P&L) | BALANCE SHEET | CASH FLOW | RATIOS — CONSOLIDATED

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Total Assets | 5,523.38 | 6,474.86 | 6,601.09 | 6,530.35 | 8,870.91 |
| Total Assets Growth (%) | ↓-14.69 | ↓-1.91 | +1.08 | ↓-26.38 | -20.23 |
| Total Liabilities | 4,424.24 | 7,813.09 | 8,038.85 | 17,572.19 | 17,374.00 |
| Total Liabilities Growth (%) | -43.37 | ↓-2.81 | ↓-54.25 | +1.14 | ↓-3.89 |
| Total Equity | 1,099.14 | -3,575.74 | -3,492.34 | -11,070.34 | -8,531.59 |
| Total Equity Growth (%) | - | - | - | - | - |
| Current Ratio (x) | 1.55 | 1.20 | 1.27 | 0.28 | 0.59 |
| Total Debt to Equity (x) | 1.73 | -1.18 | -1.23 | -0.88 | -1.13 |
| Contingent Liabilities | 210.49 | 185.74 | 186.71 | 384.37 | 773.00 |

**INSIGHTS**

**Cash from Operations vs PAT**

Operating cash flow of Rs 466.66 cr is 0.16 times compared to the reported net profit of Rs 2849.01 cr. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Net Cash flow from Operating Activities | 466.66 | 1,301.90 | 530.50 | -929.04 | 1,266.74 |
| Net Cash used in Investing Activities | 84.91 | -18.43 | -23.73 | -32.46 | 125.15 |
| Net Cash flow from Financing Activities | -684.49 | -1,044.95 | -326.60 | 969.24 | -1,898.34 |
| Net Cash Flow | -133.12 | 237.93 | 180.17 | 7.71 | -506.45 |
| Closing Cash & Cash Equivalent | 367.31 | 500.43 | 262.50 | 82.33 | 74.62 |
| Closing Cash & Cash Equivalent Growth (%) | -26.60 | 90.64 | 218.84 | 10.33 | -87.16 |
| Total Debt/ CFO (x) | 4.08 | 3.20 | 7.99 | -10.43 | 7.60 |

INCOME (P&L) BALANCE SHEET CASH FLOW **RATIOS** CONSOLIDATED

**INSIGHTS**

**ROE Outperforming 5 Year Average**


Company delivered ROE of 259.2% in year ending 31 Mar, 2023 outperforming its 5 year avg. of 5.57%. (Source: Consolidated Financials)

| ANNUAL | FY 2023 | FY 2022 | FY 2021 | FY 2020 | FY 2019 |
|---|---|---|---|---|---|
| Return on Equity (%) | 259.20 | 0.00 | -3.02 | 0.00 | 0.00 |
| Return on Capital Employed (%) | 20.96 | 29.09 | 10.61 | 12.48 | 14.46 |
| Return on Assets (%) | 51.58 | -3.08 | 1.57 | -40.46 | -17.21 |
| Interest Coverage Ratio (x) | 2.02 | 1.24 | 0.56 | -0.91 | -0.24 |
| Asset Turnover Ratio (x) | 1.00 | 1.01 | 0.51 | 45.52 | 56.64 |
| Price to Earnings (x) | 3.40 | -42.37 | 40.82 | -0.40 | -2.14 |
| Price to Book (x) | 8.82 | -2.39 | -1.23 | -0.10 | -0.38 |
| EV/EBITDA (x) | 13.19 | 15.68 | 18.26 | -12.75 | 311.06 |
| EBITDA Margin (%) | 14.26 | 13.85 | 16.56 | -27.99 | 0.81 |

## மேம்பட்ட விளக்கப்படம்:



## சகநிறுவன ஒப்பீடு:





SUZLON ENERGY STOCK PERFORMANCE | RATIO PERFORMANCE | SEE ALL PARAMETERS

| NAME | P/E (X) | P/B (X) | ROE % | ROA % | REV CAGR [3YR] | OPM |
|---|---|---|---|---|---|---|
| Suzlon Energy | 87.89 | 54.69 | 259.20 | 51.58 | 25.63 | 9.91 |
| Inox Wind Ltd. × | -92.35 | 8.43 | -38.40 | -10.96 | -0.52 | -47.28 |
| Inox Wind Energy × | -42.81 | 3.57 | -33.50 | -5.79 | 0.00 | -47.93 |
| Orient Green Pwr × | 51.52 | 4.33 | 6.70 | 2.07 | -9.02 | 46.45 |
| Indowind Energy × | -12.32 | 1.04 | -8.42 | -6.14 | 17.58 | 23.26 |

Add More

## ஷேர்ஹோல்டிங் பேட்டர்ன்:


QOQ CHANGE | TOTAL SHAREHOLDINGS




*Showing Shareholding as on 31 Dec 2023*

| CATEGORY | NO. OF SHARES | PERCENTAGE | % CHANGE QOQ |
|---|---|---|---|
| Promoters | 1,80,86,85,603 | 13.29 % | 0.00 |
| Pledge | 0 | 0.00 % | 0.00 |
| FII | 2,42,71,46,825 | 17.83 % | ↑6.95 |
| DII | 40,72,09,183 | 3.00 % | -3.39 |
| MF | 18,05,56,675 | 1.33 % | -3.37 |
| Others | 8,96,96,46,611 | 65.88 % | -3.56 |

QOQ CHANGE | TOTAL SHAREHOLDINGS




*Showing Suzlon Energy Shareholding as on 31 Dec 2023*

| CATEGORY | 31 DEC 2023 | 30 SEP 2023 | 31 MAR 2023 | 31 DEC 2022 |
|---|---|---|---|---|
| Promoters | 13.29 | 13.29 | 14.50 | 14.50 |
| Pledge | 0.00 | 0.00 | 80.77 | 80.77 |
| FII | 17.83 | 10.88 | 7.64 | 7.65 |
| DII | 3.00 | 6.39 | 1.20 | 1.34 |
| Mutual Funds | 1.33 | 4.70 | 0.08 | 0.22 |
| Others | 65.88 | 69.44 | 76.66 | 76.51 |

## பரஸ்பர நிதி முதலீட்டாளர்கள்:

| Invesco India Contra Direct-G | ICICI Pru Midcap Direct-G | Bandhan Flexi Cap Direct-G |
|---|---|---|
| Equity: Value Oriented | Equity: Mid Cap | Equity: Flexi Cap |
| 3 ★ | 2 ★ | 2 ★ |
| 121.62 Amount Invested (in Cr.) | 119.47 Amount Invested (in Cr.) | 85.42 Amount Invested (in Cr.) |
| 0.91% % of AUM | 2.21% % of AUM | 1.27% % of AUM |
| 0.00 % Change (MoM basis) | ↓-10.75 % Change (MoM basis) | ↓-0.54 % Change (MoM basis) |

*MF Ownership as on 31 January 2024*

View all Mutual Fund Schemes ▸

## எமது பரிந்துரை:

இந்நிறுவனத்தின் பங்குகளை தற்போதைய சந்தை விலையான ரூபாய் 44 இல் வாங்கலாம். மேலும் இறங்கும் தறுவாயில் ரூபாய் 20 வரை வாங்கலாம். நீண்ட கால அடிப்படையில் இந்நிறுவனத்தின் இலக்கு ரூபாய் 60, 80, 100, 120, 160 + + +

## இந்த மாத குறுகிய கால பங்குகளின் பரிந்துரைகள்:

1. HDFC Life Insurance Company Ltd... Entry 580 to 590. Accumulate more till 500. Target 1. 650 and Target 2. 700
2. Monte Carlo Fashions Ltd... Entry 620 to 640. Accumulate more till 500. Target 1. 700 and Target 2. 800
3. Steel Authority of India Ltd... Entey 130 to 140. Accumulate more till 100. Target 1. 170 and Target 2. 200
4. Nilkamal Ltd... Entry 1950 to 1980. Accumulate more till 1800. Target 1. 2200 and Target 2. 2400

5. Dynacons Systems and Solutions Ltd...
Entry 850 to 880. Accumulate more till 700. Target 1. 1000 and Target 2. 1200

6. Prakash Pipes Ltd... Entry 420 to 440. Accumulate more till 350. Target 1. 500 and Target 2. 550.

## பொறுப்புத் துறப்பு

கட்டுரையாளர் செபியில் பதிவு செய்யப்பட்ட ஆய்வாளர் அல்ல. இடுகையிடப்பட்ட விளக்கங்கள் / நிலைகள் / பங்குகள் தனிப்பட்ட ஆய்வு. இந்தப் பட்டியல் முற்றிலும் ஆய்வுப் பகிர்வுக்காகவே, வாங்கவோ விற்கவோ எந்தப் பரிந்துரையும் இல்லை. தனிநபர் உங்கள் சொந்த விருப்பத்தின்படி முடிவு எடுக்க வேண்டும் யாரேனும் சுயமாக எந்த ஒரு வர்த்தக நடவடிக்கையையும் மேற்கொண்டால், எந்தவிதமான இழப்புகளுக்கும் லாபத்திற்கும் கட்டுரையாளர் / நாம்நகரத்தார் மின்னிதழோ பொறுப்பல்ல..!! இது முற்றிலும் ஒருவரின் சொந்த நடவடிக்கை மற்றும் விருப்பம். எந்த விதமான சட்ட நடவடிக்கைகளும் ஏற்றுக்கொள்ளப்படாது

**அனுபவம் என்பது பெரிதாக ஒன்றும் கிடையாது. எல்லாவற்றையும் இழந்த பிறகு எஞ்சி நிற்பதே**



– கண்ணதாசன்




- King Size Bed
- Air Condition
- Transport
- WIFI
- Food
- Toiletries

# Mithila Eco Stay

Rangiem / Mithilaipatti, Pudukkottai dist , Tamilnadu, India – 622409

**Contact Us : +91 8760434567 +91 9566655296**

www.mithilatoursecostay.com

# NAGARATHAAR KAPITAL

**Webinar Course.**
**Stock Market Course (Beginners).**
**Basics, Fundamentals, Technical (Introduction)**
**Stock Market Course (Advanced).**
**Technical, Strategies**

**Why One Wealth Course?**
**Learn from Qualified and Experienced Expert Panelists**
**Your search for in-depth Knowledge ends here.**
**You will become a Professional trader and Informed Investor**
**Got Learn about Different Market**

**Who can join?**

I. Students.
II. Professionals from other sectors who want to become Part time and Full time Trader.
III. Professionals from other sectors who want to formulate their Portfolio. House Wife.
IV. Anyone who wants to make a career in Equity / Commodity / Currency Trading / to become Investment Advisor / to become Financial Advisors.

**Our "Young generation" can learn and start doing analysis and entering in potential stock @ Correct Entry / CorrectExit to win the Trade and Investment in turn around stocks to create wealth by their own in reasonable period of time.**

**Webinar Dates** — Every month will post it on our NAGARATHAAR KAPITAL Forum
This month Class will be on Saturday 10th March 2024.

**Webinar Timings** — India Time: 17:30Hrs-18.30Hrs In-Week days & 17.00Hrs-18.00Hrs Week Ends.


**# For further Details Contact:** +91-9790755337    +91-9884072224

nagarathar.capital@gmail.com

# நீங்கள் எப்படி... மிதுன லக்னம்..!

ஜோதிடர் எல்லி




நாம் நகரத்தார் மின்னிதழில் தொடர்ந்து பயணித்து ஆதரவு அளித்துவரும் வாசகர்களுக்கு வணக்கம்..!

12 லக்கன பாவகங்களை பற்றிய தொடர் கட்டுரையில் மேஷம் தொடங்கி ரிஷபம் வரையிலும் பார்த்து விட்டோம். இந்த மாதம் உபய லக்னமான மிதுனம் பற்றி பார்க்கலாம்!

## மிதுன லக்ன பலன்கள்



மிதுனம் புத்திகாரகன் புதன் பகவானின் ஆட்சி வீடு! ஆளுமை எண்ணம் கொண்டது காற்று ராசி. நினைத்ததை அடைய அதீத முயற்சி மட்டும் விடாப்பிடியாக இருப்பது இந்த லக்ன காரர்களின் சுபாவம்.

உபய லக்னக்காரர்களுக்கு ஏழாமிடம் பாதக ஸ்தானமாக வருகிறது எனவே இவர்களுக்கு இல்லற வாழ்க்கை அவ்வளவாக நிறைவுடன் இருப்பதில்லை தாயாருடன் இணக்கமான சூழல்



அமையாது அப்படி புரிதல் இருப்பினும் தாயின் உடல் நிலையில் சிறிய பாதிப்பு தென்படுவது இயல்பு!

லக்னாதிபதியான புதன் லக்னத்திற்கு 1,4,7,10 போன்ற பாவங்களில் நிற்பது சிறப்பல்ல, அதிலும் 4 மற்றும் 7 ம் பாவங்களில் அமர்வது ஜாதகருக்கு பாதிப்புகளையே கொடுக்கிறது 7ல் கேந்திராதிபத்ய தோஷம் பெறும் புதன் பகவான் இல்லறத்தை, களத்திரம் (திருமண வாழ்க்கை) நசிக்க செய்து விடுவதை கண்கூடாக காணலாம்.

இயற்கை சுபரான குரு பகவான் இந்த லக்ன காரர்களுக்கு கொடுமையான பாவியாகவே செயல்படுவார். குரு பகவான் மற்றும் சந்திரன் ஆகிய இரு கிரகங்களும் மாரகாதிபதிகள் ஆவார்கள் இவர்கள் மரணத்தையோ அல்லது அதற்கு சமமான கண்டத்தையோ தங்கள் தசா புத்திகளில் கொடுக்க பொதுவாக கடமை பட்டவர்கள்.

சகோதர காரகன் செவ்வாய் பகவானும் லக்ன அசுபர்தான். சனி பகவான் பொதுவாக நன்மை தீமைகளை கலந்து செய்வார். இருக்கும் இடத்தை பொறுத்து பலன்கள் அமையும்.

சுக்கிரன் இவர்களுக்கு முழுமையான யோகர் என்பதால் பொதுவாக நற்பலன்களை அள்ளி கொடுப்பார் எனவே இவர் லக்னத்திற்கு மறைதலோ, கெட்டு போவதோ கூடாது என்பது விதி!

இந்த லக்ன காரர்கள் நிறைய பேசுவார்கள், இவர்களின் பேச்சு எவ்வளவு லாபத்தை கொடுக்கிறதோ அந்தளவிற்கு நஷ்டத்தையும் கொடுத்து விடுகிறது தாயாரின் மீது அளவு கடந்த பாசம் கொண்டவர்கள் இவர்கள். ஆனாலும் தாய் வழி உறவில் சுமூகமான சூழல் இருப்பதில்லை இவர்களின் ஆழ்மனதில் திருமண பந்தத்தின் மீது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். வாழ்க்கை துணை விசயத்தில் திருப்தி இருப்பதில்லை.



அரசு துறைகள் அரசியல் ஈடுபாடு இவற்றில் வெற்றி பெற அதிக முயற்சி செய்து வருவார்கள். சகோதரர்கள் உடன் கருத்து வேறுபாடுகள் அதிகமாக உண்டாகும்.

அதனால் சில நேரங்களில் வம்பு வழக்குகள், கைகலப்பு வரையிலும் போகலாம், உடன்பிறப்புகளால் அதிக விரயம் ஏற்படவும் வாய்ப்புண்டு. எனவே ரத்த உறவுகளுடன் பிணக்குகளை தவிர்க்க வேண்டும்.

நண்பர்கள் உடன் அதிக நேரம் செலவிட விரும்புவார்கள். அவர்களுக்கு முடிந்த உதவிகளை மனமுவந்து செய்வார்கள்.சொந்த ஊரில் தொடர்ந்து குடியிருக்க முடியாமல் இடம் பெயர்ந்து சிறிது தூரத்தில் வாழ்ந்து வரும் நிலை ஏற்பட்டு விடுகிறது. அவ்வாறு இடமாற்றம் இல்லாமல் உள்ளூரிலேயே வசிக்கும் போது வாழ்க்கையில் சில பிரச்சினைகளும் சவால்களும் உருவாகிறது.

இறைபக்தி, கோயில் சார்ந்த காரியங்களில் நேரிடையாக ஈடுபடுவது எதிர்பார்த்த எண்ணங்களை ஏற்படுத்துவதில்லை. பல நேரங்களில் அவப்பெயரை உண்டாக்கவும் செய்து விடுகிறது.

நல்ல சொற்களை மட்டுமே பயன்படுத்துவது கொடுத்த வாக்கின்படி நடப்பது இவர்களுக்கு நல்லது. இதனை மீறும் போது பல அவமானங்களை சந்திக்க வேண்டியது வந்து விடும். கள்ள உறவினை தவிர்த்து விடுவதும் நல்லது.

தரகு தொழில் கைகொடுக்கும் இடைத்தரகர்களாக செயல்படுவது நல்லது.

ஆசிரியர்கள், பெரியோர்கள், தங்களுக்கு ஆபத்து காலத்தில் உபதேசம் செய்தவர்கள் இவர்களை மறக்காமல் போற்றி வரவேண்டும், மேற்கண்டவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ ஏதாவது கெடுதல் செய்து விட்டால் வாழ்க்கையையே புரட்டிப் போட்டு விடும், ஆகையால் இந்த விசயத்தில் கவனம் வேண்டும்.

புதன் சூரியன் சேர்க்கை ஜாதகரை கல்வி கேள்விகளில் வல்லமை கொண்டவராக்கும். புத்தி சாதுர்யம் மிளிரும்!

சுக்கிரன் பலம் பொருந்திய நிலையில் வாழ்க்கை வளம் பெறும்,அயன சயன போக பாக்கியம் கிடைக்கும்.அதாவது படுக்கை சுகம், உணவு, நித்திரை இவைகள் சீராக இருக்கும்.

குரு பகவான் மற்றும் செவ்வாய் வலு பெறுவது வாழ்க்கையை துயரத்தில் இருத்திவிடுகிறது. குரு செவ்வாய் சேர்க்கை குரு மங்கள யோகம் என்றாலும் இவர்களை பொறுத்தவரையில் அப்படி முழுமையாக எடுத்து கொள்ள முடியாது இருவரும் லக்ன அசுபர்கள் என்பதால் இந்த இணைவின் முழு தன்மையையும் அலசிய பின்னரே பலன்கள் கூற முடியும்.

புதன் மற்றும் சுக்கிர பகவானை வலுப்பெற செய்தல் இவர்களுக்கு மிகவும் நல்லது.

புதன் சுக்கிரன் இணைவு நல்ல கலைத்திறனை கொடுக்கும் ஜாதகர் கலை வித்தகர் என்று கூறலாம் ஏதாவது ஒரு கலைத்துறையில் நிபுணத்துவம் பெற்றவராக வலம் வருவார்.


மிதுன லக்னகாரர்கள் திருமால் லெட்சுமி வழிபாடு



செய்து தொடர்ந்து வருதல் வேண்டும். பச்சை மற்றும் தூய வெண்மை நிறத்தை பயன் படுத்தி வரலாம். வாழ்க்கை துணையினையுடன் நட்புறவு பேணி வர வேண்டும்.

இதுவரையிலும் மிதுன லக்னம் பற்றிய தகவல்கள் தெரிந்து கொண்டோம் . வரும் மாதத்தில் அடுத்த லக்ன பாவத்தை பற்றி பார்க்கலாம்

இராமநாதபுரத்தில் வசிக்கும் ஜோதிடர் எல்லி சட்டம் பயின்றவர் . ஜோதிடம் ,தத்துவம் மற்றும் வரலாறு ஆகியவற்றில் நிபுணத்துவம் கொண்ட இவர் , ஜோதிடம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை இணையத்தில் தொடர்ந்து எழுதும் டிஜிட்டல் ஜோதிட விற்பன்னர் . தொடர்புக்கு : 99 44 86 59 43



# குடும்பம்

இல்லத்தில் மகிழ்ச்சி இருந்திடச் சிறப்பு
புரிதல் கொண்டிட இணைந்திடும் களிப்பு

இனிதுடன் பழகிட இனிமைகள் தொடர்ந்திடும்
ரௌத்திரம் மறந்திட வாழ்க்கைச் செழித்திடும்

சோர்ந்திடும் மனதினைக் குளிர்ந்திட வைக்கும்
ஆறுதல் சொல்லிக் கரங்களைப் பிடிக்கும்

அன்பாய் அணைத்துக் கவலைகள் போக்கும்
அதுவே சுகமென இதயம் நினைக்கும்

குடும்பம் நித்தம் இன்பத்தின் உச்சம்
நடந்திடும் பாங்கில் அமைந்திடும் சொர்க்கம்



கவிச்சுடர் தஞ்சை
பழ வள்ளியப்பன்
மதுரை



நாம் நகரத்தார்

சமூக இணையதள மின்னிதழ்

நகரத்தார்களின் வாசிப்பின் ஓர் அங்கமாக
வணிகம், இலக்கியம், ஆன்மீகம், பண்பாடு, வாழ்வியல்
மற்றும் நிகழ்வுகள் ஆகிய தகவல்களை தாங்கி
தேர்ந்தெடுக்கப்பட்ட வாசிப்புகளின்
பெட்டகமாக ஓர் மின்னிதழ்.

மாதந்தோறும் இலவசமாக இணையவழி மற்றும்
உங்கள் கைபேசி வாயிலாக...

நாம் நகரத்தார் மின்னிதழை செலவின்றி உங்கள்
மொபைலில் வாசிக்க, உங்கள் விருப்பத்தை கீழ் உள்ள
எண்ணுக்கு வாட்ஸாப் மூலம் தெரியப்படுத்துங்கள்,

# 97917 76534

www.naamnagarathar.com